புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ ஜூன் ௴ 26௳ [நெ. 152

பிரஸங்கம் CLII.

பிரிடன் ஸிஸிலியில் ஆக்ஷிபுரிந்தது.

(இல்லுஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா).

நன்றியறிவுள்ள ஜனங்கள்.

ஸிஸிலியை, கிரேக்கர்கள், ரோமர்கள், யூதர்கள், ஜெர்மானியர்கள், பிரிடிஷார்கள், ஸ்பெயின் தேசத்தார்கள், பிரெஞ்சுக்காரர்கள் முறையே ஆண்டபின் காரிபால்டி அதை இதாலிய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். பிரிடனுடைய ஆக்ஷிமுறைகளை ஜனங்கள் இன்றும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள். மற்ற இதாலிய மாகாணங்களிலோ அல்லது தீவுகளிலோ யிருக்கும் ஜனங்களைவிட இத்தீவில் முஸோலினியின் பாஸிஸ்டு ஆக்ஷியை எதிர்ப்பவர்களின் சங்கியை அதிகமாகயிருக்கும்.

ஸிஸிலியில் நேசதேசத் துருப்புகள் இறங்கினால் அங்கிருக்கும் மக்கள் அவர்களுக்கு நிச்சயமாக நல்வரவு கூறுவார்கள். நெபோலியன் நடத்திய யுத்தங்களுக்குப்பின் ஸிஸிலியிலுள்ள மக்கள் பிரிடிஷாரை அன்புடனும் கௌரவத்துடனும் மதித்துவருகிறார்கள். நெபோலியன் யுத்தங்கள் நடைபெற்றபொழுது ஸிஸிலி பிரிடனுடைய ஆக்ஷிக்குட்பட்டிருந்தது. நெபோலியனுடைய மெய்க்காப்பாளரான மார்ஷல் மூராட் நேபிள்ஸின் மன்னராக யிருந்தார். ஸிஸிலி நெபோலியனுடைய வலையில் அகப்படவில்லை. பிரிடிஷாரை ஆதரித்துவந்தது 1812-ம் வருஷத்தில் பிரிடிஷ் நிர்வாக முறையை ஒட்டி ஒரு அரசாங்கம் ஸிஸிலியில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தத்தீவு பிரெஞ்சுக்காரர் வசமானபிறகு அந்த அரசாங்கம் மாறுதலடைந்துவிட்டது.

மற்ற எல்லாப் பிரதேசங்களையும்விட இவ்விடத்தில் பாஸிஸ்டு ஆட்சியானது ஸ்வதந்திரதாகமுள்ள ஸிஸிலியர்களின் விரோதத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

சீர்திருத்தங்கள் செய்வதாக வாக்குறுதி செய்தபோதிலும் அயல்நாடுகளில் வசிக்கும் நில ஸ்வான்தார்கள் ஸிஸிலிய மக்களை அடிமைகளைப்போல் நடத்திவருகிறார்கள். ஏற்கனவே பலமாகயிருந்த மாபியா என்ற ரகசிய சங்கமானது. முஸோலினியின் அடக்குமுறைகளையும் மீறி வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. நேசதேசங்கள் வெற்றிபெற்றால்தான் பாஸிஸ்டு கொடுமையினின்றும் தங்களுக்கு விடுதலை கிடைக்குமென்று அநேக ஸிஸிலியர்கள் எண்ணுகிறார்கள்.

நம்முடைய வேலை சுலபமானது.

ஜெர்மானியர்கள் கிரீட்டை கைப்பற்றியதைவிட ஸிஸிலியின்பேரில் நாம் படையெடுப்பது சுலபமான காரியமாகும். கிரீட்டை விமான மூலம் படையெடுத்து ஜெர்மனி ஆக்கிரமித்தது. அங்கே தரையில் தற்காப்பு அதிகமில்லாததுதான் காரணம். கடலில் பிரிடிஷ் கடற்படை ஆதிக்கம் பெற்றிருந்தது. ஆகையால் ஜெர்மனி செய்த முயற்சியினின்றும் அதற்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இந்த நஷ்டத்திலிருந்து ஜெர்மன் குடைப்படைகள் மீளமுடியவில்லை. ஸிஸிலியைத் தாக்குவதற்கு ஆகாயத்திலிருந்தும் கடலிலிருந்தும் நேசநாடுகளுக்குச் சௌகரியமிருக்கிறது. ஆகிலும் கிரீட்டைவிட ஸிஸிலியில் பலமான தற்காப்புயிருக்குமென்பது நிச்சயம்.

ஸிஸிலியிலிருந்து வடமேற்கு மூலையாக ஒரு குழல் போலிருக்கும் குறுகலான இதாலிய தீபகற்பத்தை நேசநாடுகள் ஆக்கிரமிப்பதென்பது சிரம சாத்யமான காரியம். டூனிஸிலிருந்து

ஸிஸிலி, தெற்கு இதாலி, டாரண்டோ வளைகுடா, ஒட்ராண்டோ ஜலசந்தி வழியாக ஆல்பெனியா வரையில் குறுக்கான ஒரு ஸ்தானத்தை நிர்மாணம் செய்து மத்தியதரைக் கடலிலும் ஏட்ரியாடிக்கடலிலும் நாம் ஆதிக்கம் பெற்றுவிட்டால், இதாலியை நாம் ஒரு இடத்தில் அடைத்துவிட்டதாகும். அதன் கடற்படை பயன்படாது. தைரியமாகச் சண்டை போட்டுவரும் யூகோஸ்லாவியாவிலுள்ள செட்னிக்களுடன் நேசநாடுகள் தொடர்பு ஏற்படுத்தி விடலாம்.

ஐரோப்பாமீது வெற்றிகரமாகப் படையெடுப்புச் செய்வதென்பது இதாலி மார்க்கமாக நடைபெறாது. முன்காலத்தில் நடைபெற்ற படையெடுப்புகள் இதாலியிலிருந்து ஆரம்பமாகி, ஸிஸிலி மார்க்கமாக ஆபிரிக்காவுக்குச் சென்றனவே ஒழிய இதற்கு எதிர்முறையாக நடைபெற்றதில்லை.

வட இதாலியிலுள்ள செழிப்பான சமவெளிகளை நாம் கைப்பற்றினாலும், ஆல்ப்ஸ் மலைகளுக்குப் பின்புறமுள்ள ஜெர்மனியை முறியடிப்பதற்கு, அது நமக்கு ஒரு சாதகத்தையுமளிக்காது. ஜெனோவாவிலிருந்து டிரிஸ்டிவரையிலும் அரைவட்டமாகமுள்ள ஆல்ப்ஸ் மலையானது, அதற்குப் பின்புறமுள்ள ஜெர்மன் நாடுகளுக்கு இயற்கையான அரணாகயிருக்கிறது.

இதாலியை நாம் துண்டாடிவிட்டால், ஜெர்மனிக்கு யூகோஸ்லாவியா, ஹங்கேரி, ஆஸ்திரியா மார்க்கமாகத்தான் நாம் செல்லவேண்டும். இதாலிக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் மத்தியிலுள்ள ஒட்ராண்டோ ஜலசந்தி 50 மைல்கள் அகலமுள்ளது. ஸெர்பிய, ஸ்லவோகிய கொரில்லாப் படைகளின் உதவிகொண்டு படையெடுக்கும் துருப்புகள் டால்மேஷியன் கடற்கரையை ஊடுருவிச்சென்று ஸாக்ரெப் சமவெளிகளையும் அம்பர் (Amber) வியாபார மார்க்கமாகயிருந்த ரஸ்தாவையும் அடைந்துவிடலாம். இந்த ரஸ்தா ஏட்ரியாடிக் கடலிலிருந்து புறப்பட்டு வியன்னா, மொராவியன் வாசற்படி, ஓடர் பள்ளத்தாக்கு வழியாகச் சென்று பால்டிக் கடலுக்குச் செல்லுகிறது.

இந்த மார்க்கத்தை நாம் அவலம்பித்தால் நாஸிகளை நாம் வலுவாகத்தாக்கலாம். ஆல்ப்ஸ் மலையின் குறுகலான பள்ளத்தாக்குகள் எதிரியின் தற்காப்பு முறைகளுக்கு சாதகமாகயிருக்குமாகையால் அந்த மார்க்கம் சிலாக்கியமானதல்ல. கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும், தென்கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் ஜெர்மனிக்கு அவசியமான இயற்கைப் பொருள்கள் கிடைப்பது நின்றுவிடுமாகையால் ஜெர்மனி கஷ்டப்படும்.

ஸிஸிலியில் இதாலிய ஜனத்தொகையில் பத்திலொருபங்கு இருக்கிறது. ஆலிவ் எண்ணெய், திராக்ஷாரஸங்கள், மத்திம சீதோஷ்ணமுள்ள பிரதேசத்திலுண்டாகும் கனிவர்க்கங்களை உற்பத்திசெய்யும் 4,00,000 விவசாய ஸ்தாபனங்கள் இங்கிருக்கின்றன. ஸிஸிலியில் மீதப்படும் கோதுமையும், இதாலிக்குத் தேவையான, கனிவர்க்கங்களும், திராக்ஷ ரஸமும் இதாலிக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சென்ற யுத்தங்களில் ஸிஸிலி எடுத்துக்கொண்ட பங்கு.

மத்தியதரைக்கடலின் நாகரீகத்தை அபிவிருத்தி செய்ததில் ஸிஸிலிக்கு பெரும் பங்குண்டு. ஆபிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள தீவாகயிருப்பதால் வடக்கேயிருந்து தெற்கேபோவதற்கும், தெற்கேயிருந்து வடக்கே போவதற்கும் இது இடைஸ்தலமாக 3,000-ம் வருஷங்களாக உபயோகப்பட்டு வந்திருக்கிறது. இங்கே கிறிஸ்துக்குமுன் 734-ம் வருஷத்தில் கிரேக்கர்கள் குடியேறினார்கள். பாரஸீக அரசரான ஸெர்க்ஸீஸ் மன்னர் கிரீஸ் தேசத்தைப் பிடிக்க முயன்றபொழுது, ஆபிரிக்காவிலுள்ள கார்த்தஜீனியர்கள் ஸிஸிலியைக் கைப்பற்றச் செய்த முயற்சி பயன்படவில்லை. ரோமர்கள் இந்தத் தீவைப்பிடித்து கிறிஸ்துக்குமுன் 241-ம் வருஷம் முதல் கிறிஸ்துக்குப்பின் 826-ம் வருஷம் வரையில் அரசாக்ஷி புரிந்தார்கள். ஸிஸிலியைத் தளமாக வைத்துக்கொண்டு ரோமர்கள் பூனிக் யுத்தங்களை நடத்தினார்கள், ஆபிரிக்காவில் முன்னேறி கார்த்தேஜையும் அழித்தார்கள். ஸீஸரும், ஆகஸ்டஸும் இதர ரோமன் சக்ரவர்த்திகளும் ஸிஸிலி வழியாகச் சென்றுதான் ஆபிரிக்காவில் வெற்றி பெற்றார்கள். எகிப்தைக் கைப்பற்றுமுன் ரோமுக்கு ஸிஸிலிதான் தான்யக் களஞ்சியமாகவிருந்தது. இதாலிக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் ஸிஸிலி ஸப்ளை செய்து வந்தது.

ஸிஸிலி, கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்த கிழத்திசை சாம்ராஜ்யத்தில் சேருமுன், ப்ராங்க் ஜாதியாரும், வாண்டல்ஸ் ஜாதியாரும், ஆஸட்ரகாத் ஜாதியாரும் இதை ஆண்டு வந்தனர். கிழக்கு சாம்ராஜ்யம் தன்னுடைய கடற்படையின் வலிமையினால் 300 வருஷங்கள் ஸிஸிலியை ஆண்டுவந்தது.

முகமதியர்களின் ஆக்ஷி.

பிறகு 826-ம் வருஷத்தில் யூதர்கள் வந்துசேர்ந்தார்கள் அவர்களின் ஆளுகையில் ஸிஸிலி முன்னேற்றமடைந்தது. 950-ம் வருஷத்தில் அதன் ஜனத்தொகை 3 மிலியன் என்று கணக்கிடப்பட்டது. இதில பாதிக்குமமல் முகமதியர்கள். ஸிஸிலியில் நவீன முறைப்படி நிர்வாகம் 12-வது நூற்றுண்டில் ஜெர்மனியைச்சேர்ந்த ஹோஹன் ஸ்டாபன் வம்சத்தார் அரசாக்ஷி புரிந்தபொழுதுதான் ஏற்பட்டது. இந்த வம்சத்தில பிறந்த கான்ராட் என்பவன் துரதிருஷ்ட வசமாக 1268-ம் வருஷத்தில் கொலை செய்யப்பட்டான்.

பிறகு வந்த பிரெஞ்சு மன்னர்களும் சரியான ஆக்ஷி புரியவில்லை. 1282-ம் வருஷத்தில் அவர்களும் ஸிஸிலியில் கொலை செய்யப்பட்டார்கள். பிறகு ஸ்பெயின் தேசத்தார்களும் அதன்பிறகு போர்போன் வம்சத்தைச் சேர்ந்தவர்களும் இஙகு அமுல் நடத்தினுர்கள். கடைசியாக 1860-ம் வருஷத்தில் காரிபால்டி இதை கைவசப்படுத்திக்கொண்டான்.

வார யுத்தச் செய்திகள்.

19—6—43-லிருந்து 25—6—43-வரை.

இதாலி.—ஏப்ரல் மாதம் 15-ம்தேதி முதல் ஜூன்மாதம் 15-ம்தேதி முடிய வட ஆபிரிக்காவிலும் மத்தியக்கிழக்கிலும், விமான யுத்தத்தில் அச்சுநாட்டாரின் 685 விமானஙகளையும், தரையிலிருக்கும் 252 விமானங்களையும் நேசதேச விமானப்படை அழித்திருக்கிறது. இதை விஞ மத்தியதரைக்கடலில் 118 அச்சுக்கப்பல்கள் மூழ்கிவிட்டன.

ஸுரிக்கிலிருந்துவந்த செய்தியிலிருந்து ஸிஸிலியிலுள்ள பெரிய நகரங்களைக் காலி செய்யும்படியாக முஸோலினி உத்தரவு பிறப்புவித்துவிட்டானும்.

பாக்கியா, பாரி, பிரிண்டிஸி, லெக்கி, டாரண்டோ, காஸென்ஸா, கடான்ஸாரோ முதலிய மாகாணங்கள் யுத்த அரங்கஙளென்று முஸோலினி உத்தரவிட்டுவிட்டான்.

இதாலிய கேந்திர ஸ்தானங்களை இடைவிடாது நமது விமானப்படை நொருக்கிவருகிறது. கீழ்க்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன.

ஜூன் 15.—ஐந்து முக்கியமான விமான தளங்கள்.

ஜூன் 18.—ஸைரகூஸ், மெஸ்ஸினு, ஸிஸிலியிலுள்ள மிலோ, காமிஸோ என்னுமிடத்திலுள்ள விமான தளங்கள் ஸார்டீனியாவிலுள்ள ஆப்பியா, கோல்போ, அரான்ஸி என்னுமிடத்திலுள்ள கப்பல்துறைகள், கப்பல்கள்.

ஜூன் 19.—மெஸ்ஸினு, காஸ்டெல் வெட்ரானே, போராஸோ, மிலோ, ரிக்கியோடி கலாப்ரியா, ஸான் கியோவாணி. கடைசி இரண்டும் இதாலியின் அடிபாகத்திலிருக்கின்றன. இவ்விடங்களில் 2,50,000 ராத்தல் எடைமானமுள்ள வெடிகுண்டுகளும் எரிவெடிகளும் வீசப்பட்டன.

ஜூன் 20, 21.—நேபிள்ஸ், கான்காலோ, ஸாலர்னே, பாடிபாக்ஸியா, பெர்ரா அருண்ஷியாடா. (20-ம் தேதி நேபிள்ஸை வெல்லிங்டன் வெடி விமானங்களும், 21-ம்தேதி 100 பறக்கும் கோட்டைகளும் தாக்கின. தொழிற்சாலைகளும், ஆயுதசாலையும், மீன்வெடி உற்பத்திசாலையும், காஸலீன் உற்பத்திசாலையும், விமான உற்பத்திசாலையும், அநேக கட்டடங்களும் ஒரு ரயில்வே வண்டித்தொடரும் நாசமாயின).

மாஸிடோனியாவில் கிரீக் தேசாபிமானிகளுக்கும் இதாலியப் படைகளுக்கும் 52-மணி நேரம் சண்டை நடந்ததாகவும் அதில் 17 இதாலிய ஆபீஸர்களும், 482 துருப்புகளும் கைதி செய்யப்பட்டார்களென்றும் தகவல் வந்திருக்கிறது.

ஜெர்மனி.—வேவுபார்ப்பவர்கள் பிடித்திருக்கும் போட்டோ படங்களைப்பார்த்தால் மே மீ 29-ம்தேதி வெப்பர் ஸ்டாலை நமது விமானம் மிகவும் கடுமையாகத் தாக்கியதென்றும், அந்த நகரம் பூராவும், 1,000 ஏக்ரா கொண்ட பிரதேசமும் அழிவுற்றதென்றும் தெரிய வருகிறது.

ஜூன்மீ 17-ம் தேதியன்று டஸ்ஸல்டார்பும் அழிவுபட்டது. டஸ்ஸல்டார்பிலும் டொரண்டார்பிலும் இஞ்ஜின்கள் வைப்பதற்காக கட்டப்பட்டிருந்த கொட்டகைகள் தீக்கிரையாகின.

ரைன்நதிக்கரையிலும் ரூர் பிரதேசத்திலுமுள்ள ஆயுத உற்பத்தி சாலைகளை அழிக்கும் வேலை பலமாக நடைபெறுகிறது. எஸ்ஸெனிலும் டேயிஸ்பர்க்கிலும் பீரங்கிகளும் பீரங்கி குண்டுகளும் செய்யப்படும் தொழிற்சாலைகளும், நீர்மூழ்கியின் பாகங்களை உற்பத்தி செய்யும் மன்னுஸ்மான் ரோக்ரன் வெர்கியும், மீன்வெடிகளை உற்பத்திசெய்யும் T. G. ஷ்விட்ஸ்கி யந்திரசாலையும் பலமாகப் பழுதுபட்டன.

ஜூன் மாதம் 16-ம் தேதி கலோன் 115-வது தடவை தாக்கப்பட்டது. ஜூன்மீ 1-ம் தேதியன்று ஜெர்மனிக்காக பீரங்கிகளையும் என்ஜின்களையும் உற்பத்தி செய்யும் மத்திய பிரான்ஸிலுள்ள 270 ஏக்ரா கொண்ட ஷ்னீடர் தொழிற்சாலை தாக்கப்பட்டது. பிரடெரிக் ஷேவனிலுள்ள ஒலிபெருக்கும் கருவிகளை உற்பத்தி செய்யும் லப்ட்ஸ்சிப்பான் தொழிற் சாலையையும் கிராபெல்டையும் 11-ம் தேதி நமது விமானஙகள் தாக்கின. கிரெபெல்டில் 4,000 ராத்தல் எடைமானமுள்ள குண்டுகள் நிமிஷத்துக்கு 5 வீதம் போடப்பட்டன. அதே சமயத்தில் அமெரிக்க 8-வது விமானப்படை ஹல்ஸிலுள்ள ரப்பர் உற்பத்தி தொழிற்சாலை யையும், ஆண்ட்வெர்ப்புக் கருகிலுள்ள ஜெனரல் மோட்டார் தொழிற்சாலையையும் தாக்கின. ராட்டர்டாமிலுள்ள கப்பற்கட்டும் நிலயங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கிற்று.

கடல் வெற்றி.—சென்ற மாதத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஜெர்மன் யூ படகு களுக்கும் பிரிடிஷ் கடற்படை விமானப்படைகளுக்கும் நடைபெற்ற ஐந்து நாள் சண்டையின் பூரா விருத்தாந்தங்களும் நமக்குக் கிடைத்து விட்டன. இதில் நமக்கு பெரிய வெற்றி கிடைத்தது. இதன் விளைவுகள், 2 நீர் மூழ்கிகள் நிச்சயமாய் மூழ்கின. 3 மூழ்கியிருக்கலாம். அநேகம் பழுது பட்டன. துணைக்காவல் கப்பல்கள், கப்பல்களில் ஏற்றிச்சென்ற விமானங் கள், இவைகளின் உதவியுடன் மற்றொரு உபாயமும் சேர்ந்து விட்டதால், சாமான் கப்பல் களிருக்குமிடத்திலிருந்து வெகு தூரத்தில் யூ படகுகள் தாக்கப்பட்டன. ஆகையால் சாமான் கப்பல்களெல்லாம் பத்திரமாக வந்து சேர்ந்தன.

ருஷ்யா.—மடென்ஸ் பகுதியில் ருஷ்யர்கள் இந்த வாரத்தில் ஓரலிலுள்ள முனையைப் பிடித்து விட்டார்கள். ஜெர்மானியர்கள் 50 தடவை பதில் தாக்குதல் செய்தும் 2,000 பேர்களை காவு கொடுத்தும் அதைத் திரும்பப்பிடிக்க முடியவில்லை. நோவாராஸிஸ்கிலிருந்து பீரங்கிசுடும் தூரத்தில் ருஷ்யர்களிருக்கிறார்கள். ருஷ்ய விமானப்படை எதிரியின் துருப்பு வரிசைகளுக்குப் பின்சென்று தாக்கிவருகிறது. தரைச்சண்டை ஒன்றும் நடைபெறவில்லை.

பஸிபிக் யுத்தம்.—நேசதேச விமானங்கள் கீழ்கண்ட இடங்களைத் தாக்கின.

காகிலி, ஷார்ட்லாந்து, விலா, கொலம்பங்காரா, ஸலாமூவா, விடியாஸ் ஜலசந்தி, ஸெலிபிஸ், டிமார், பூகா, கிளஸ்டர்முனே, மார்காம் பள்ளத்தாக்கு, மூபொ, அட்டு, கிஸ்கா, டாபர்பானே.

ஜூன் மாதம் 16-ம் தேதியன்று கூடல்கனரை 120 ஜப்பானிய விமானங்கள் தாக்கிய பொழுது அமெரிக்கக் விமானப்படை எதிர்த்து வெற்றிபெற்றது. ஜப்பானுக்கு 27 விமானங் கள் நஷ்டம்.

டச்சுக்கிழக்குத்தீவுகளில் அம்பாயினுவுக்கு வடக்கேயுள்ள பாயிலாத்துறைமுகத் திலுள்ள ஜப்பானுக்குச் சொந்தமான எண்ணெய் பிரதேசத்தை நேசதேச விமானங்கள் தாக்கின.

ஜப்பானிய விமானங்கள் மோர்ஸ்பி துறைமுகத்தையும் முபோவையும் தாக்கின. சேதம் ஒன்றுமில்லை. 20-ம் தேதியன்று டார்வின் துறைமுகத்தைப் பகலில் தாக்கப் பிரயத்னம் செய்த 45 விமானங்கள் கொண்ட ஒரு படையை பிரிடிஷ் ஸ்பிட்பையர் விமானங்கள் தாக்கின. இந்த தாக்குதல் டார்வினுக்கு 50 மைலுக்கப்பால் நடைபெற்றது. எதிரியின் 22 விமானங்கள் நாசமாகின. இதன்பின் நமது விமானங்கள் ரபாலைத்தாக்கி 41 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளையும் எரிவெடிகளையும் வர்ஷித்தன. பிரதேசம் முழுவதும் தீப்பற்றிக்கொண் டது. அக்னிஜ்வாலை 50 மைல்களுக்கப்புறமும் தென்பட்டது. லே பிரதேசத்தில் தாக்குதல் செய்த 36 ஜப்பானிய விமானங்களில் 23 நாசமாகிவிட்டன.

சைனு.—ஹூபெயிலும் ஹோனுனிலும் 40 நாட்களாக நடைபெற்ற யுத்தத்தில் 40,000 ஜப்பானியர்கள் மரித்தனர். சீனப்படைகள் டங்க்டிங் ஏரிக்கரையிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களின் பேரில் வெடிகுண்டுகளை வர்ஷித்தனர். டௌகுடி, சுவாடங்க், சிருவா என்ற இடங்களையும் பிடித்துவிட்டனர். மேற்கு ஹூபெயில், யாங்க்டீஸ் நதிப்பிரதேசத்தில் யுத்தம் ஆரம்பமாகும் முன்னிருந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

14—6—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—(18 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

தொழிற்சாலை லக்ஷியங்கள்.—ஜெர்மனியிலுள்ள ஒபர்ஹாஸென்.

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

படகுகள், ரயில்கள் விமான நிலயங்கள்—லோ கண்டிரீஸ் (Low Countries), பிரான்ஸ் (France).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள், ராணுவ நிலயங்கள்.—பொக்காடி பால்கோ (Boccadi Falco), காஸ்டல் வெட்ரானே (Castel Vetrano).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஸியாகியா (Sciacia), பொரிஸ்ஸோ (Borizzo).

இலக்குகள்.—மர்ஸலா (Marsala), (16 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. (7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

எதிரி ரயில்வேக்கள், ஸ்டேஷன்கள், சாமான் குவியல்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யாவில்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய வியாபாரக் கப்பல்.—ஹம்போல்ட் வளைகுடா (Humboldt Bay).

பட்டணங்கள், விமான நிலயங்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள கெய்மானு (Kaimana), பாபோ (Babo).

ஜப்பானிய தரை ஸ்தாபனங்கள்.—விட்டியாஸ் (Vitiaz) ஜலஸந்தி.

ஜப்பானியப் படகுகள்.—ஹுவான் (Huon) தீபகற்பம்.

காஹிலி (Kahili). ஷார்ட்லண்ட் (Shortland) தீவுகள்.

விமானநிலயம்.—கொலம்பங்காராத்தீவிலுள்ள விலா (Vila).

கம்பியில்லாத் தந்தி நிலயம், சாமானிறங்கு மிடங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

ஜப்பானியத்துருப்புகள்.—பர்மாவிலுள்ள மாயு (Mayu) தீபகற்பம், காலிமியோ (Kalemyo) பிரதேசம்.

ரயில்ரோட் பாலம்.—பர்மாவிலுள்ள மூ (Mu) நதிக்குமேல்.

தொழிற்சாலைகள்.—பர்மாவிலுள்ள மேமியோ (Maymyo).

15—6—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—**கப்பல்கள்**—பிரான்ஸிலுள்ள செர்பார்க் (Cherbourg).

ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸிலுள்ள டியப்பி (Dieppe)க்கருகில்.

விமானச் சண்டைகள்.—பிகாம்ப் (Fecamp) பிரதேசம் (3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.—**சுரங்கவேடி பாவுதல்**—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily), கோமிஸோ (Comiso). (11 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

கடற்கரை ஸ்தாபனங்கள்.—ஸிஸிலியிலுள்ள பொர்ஸ்ரோ முனை (Cape Passero).

ரோட் ரயில் போக்குவரத்துகள்.—ஸிஸிலி (Sicily), தெற்கு இதாலி (Southern Italy).

எதிரி சிறிய கப்பல்கள்.—ஏஜியன் கடல் (Aegean Sea).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

லகுநாய் (Lakunai), ரபோபோ (Rapopo). **விமான நிலயங்கள்.**—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளாஸ்டர் முனை (Cape Gloucester).

ஜப்பானிய கிராமங்கள்.—நியூ கினியிலுள்ள போவானு (Boana), கியாபிட் (Kaiapit).

சேமிப்பு கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பட்டணம்.

எதிரிமோட்டார் போக்குவரத்துகள் ஸ்டோர்கள்.—பர்மாவிலுள்ள மாங்டா (Maungdau).

எதிரி போக்குவரத்துக்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

ஜப்பானியச் சைனியங்கள்.—பர்மாவிலுள்ள தீசாங் (Theizang), ஷிஹாங்மாக் (Sihaungmauk).

மாண்டலேக்குச் செல்லும் முக்கியமான இருப்புப்பாதை.—பர்மாவிலுள்ள பின்மானுவிற்கும் (Pyinmana), கியாகூஸி (Kyaukuse) ற்கும் இடையில்.

16—6—43. (புதன்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—**நீராவி. யந்திரங்கள்**—வடக்கு பிரான்ஸ்.

அச்சுநாட்டு போக்குவரத்துகள்.—வடக்கு பிரான்ஸ். (11 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன, 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—(15 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ராணுவ, தொழிற்சாலை லக்ஷியங்கள்—கொலோன் (Cologne), ஜெர்மனியிலுள்ள ரைன்லாந்து (Rhineland) சில இடங்கள்.

இலக்குகள்.—ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

அச்சுநாட்டு விமான தளங்களும், தரைமீதுள்ள விமானங்களும்.—சிஸிலி (Sicily).

அச்சுநாட்டுக் கப்பல்கள்.—ஏஜியன் (Aegean) கடல்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

நாஸி விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—ஸெலிபஸ்தீவிலுள்ள கெண்டாரி (Kendari).

டிமோரிலுள்ள கோபாங் (Koepang).

விமான நிலயம்.—க்ளாஸ்டர்முனை (Gloucester).

போனு (Bona) கிராமம்.

ஜப்பானியப் பிரதேசங்கள்.—மூபோ (Mubo).

ரயில்வே தளங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

எதிரி தளங்கள்.—பர்மாவிலுள்ள இண்டெய்ங்கி (Indainggy).

பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

17—6—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எதிரித் துணைக்காவலோடுகூடிய கப்பற்கூட்டம்.—டச்சுக் கடற்கரை

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

அச்சுநாட்டு தளங்கள்.—சிஸிலி (Sicily), ஸார்டீனியா (Sardinia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும.

ஜெர்மன் விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

டச்சு எண்ணெய்க் கிணறுகள்.—டச்சுக் கிழக்கு இந்தியத்தீவுகளிலுள்ள போர்ட் பாய்லா (Port Boila).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

சிறிய துறைமுகங்கள்.—ரூக்தீவு (Rooke).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஷார்ட்லண்ட்ஸ் பிரதேசத்திலுள்ள பலாலி (Ballale) தீவு.

18—6—43 (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

மின்சார நிலயம், ரயில்வே தளங்கள்.—சிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso).

விமான நிலயங்கள்.—சிஸிலியிலுள்ள மிலோ (Milo).

கப்பல்கட்டுந்துறைகள்.—ஸார்டீனியாவிலுள்ள ஆல்பியா (Olbia).

கப்பற்கட்டும் துறைகள், ரயில்வே தளங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள கோல்போ அரான்ஸி (Golfo Aranci).

போக்குவரத்துகள்.—தெற்கு ஸார்டீனியா. (39 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி.

அச்சுநாட்டுக்கப்பல்கள்.—கிரீஸின் மேற்கு கரை.

கப்பல் கட்டும் துறைகள்.—ஸிராகூஸ் (Syracuse).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஹுவான் (Huon) குடா.

சைனியங்கள்.—பூனு (Buna) பிரதேசம்.

நியூகினியிலுள்ள பீனு (Bina).

ரயில்வே தளங்கள்.—யாமிதின் (Yamethin).

எண்ணெய்க் கிணறுகள்.—பர்மாவிலுள்ள யெனுங்யாங் (Yenangyaung).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

19—6—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—அச்சுநாட்டுக் கப்பல்கள்—நார்வீஜியன் கடற்கரை.

லக்ஷியங்கள்.-பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).
இரவு.—செனேய்டார் தொழிற்சாலைகள்—மத்திய பிரான்ஸ்.
ராணுவ லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr), ரைன் லாந்து (Rhineland).
விமான நிலயம், ரயில்வே லக்ஷியங்கள்.—பிரான்ஸ் (France).
விமானச் சண்டைகள்.—பிஸ்கே வளைகுடா (Bay of Biscay).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பற்கட்டும்துறைகள்.—மெஸ்ஸினு (Messina),
கப்பல்கள்.—மெஸ்ஸினு (Messina) ஜலசந்தி.
விமான நிலயம்.—மேற்கு சிஸிலி (Western Sicily).
கப்பல்கள்.—ஸிஸிலிக் கரை.
துறைமுகங்கள்.-இதாலியிலுள்ள சான்கியோவன்னி (San Giovanni), ரெகியோடிகலாபிரியா (Reggio di Calabria).
அச்சுநாட்டுக்கப்பல்கள்.—ஏஜியன்கடல் (Aegean Sea).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.
விமான நிலங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

வனகானன் விமான நிலயம்.—நியூ பிரிடனிஉள்ள ரபால்.
எதிரி கையிலுள்ள கிராமங்கள்.—நியூ கினியிலுள்ள பின்ஷாபென் (Finschhafen).
அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
ஷார்ட்லண்ட்ஸ் (Shortlands).

20—6—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—நீராவி யந்திரங்கள், படகுகள்—பிரான்ஸ் (France), ஹாலந்து(Holland).
ஸப்மேரக் கப்பல்கள்.—பிரான்ஸ் கடற்கரை.
இரவு.—ரேடியோ நிலயம்--பிரெட்ரிக்ஷாவென் (Friedrichshaven).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.—சிஸிலி (Sicily), ஸார்டீனியா (Sardinia).
ரயில்வே போக்குவரத்துக்கள் ஸ்தாபனங்கள்.—சிஸிலி (Sicily), தெற்கு இதாலி (South Italy).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
அச்சுநாட்டு விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae), ஸலாமூவா (Salamaua).
ஜப்பானியப் படகுகள்.-பிஸ்மார்க் (Bismarc) கடல்.
கிராமங்கள்.—அக்யாப் (Akyab)பிரதேசம்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

15—6—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.—ருஷ்யா முன்னேறித் தாக்கும் அணிகளுக்குப்பின்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள கூடனே (Goodenough) தீவு.
ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனுர் (Guadalcanar).

16—6—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்து ஸ்தலங்கள்.—ருஷ்ய சேனைகளுக்குப் பின்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பேனுபேனு (Benabena) பிரதேசம்.
விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள டோபோரோ (Dobodura), ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனுர் (Guadalcanar). (77 எதிரி விமானஙகள் சுட்டுத் தள்ளப்பட்டன).

17—6—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பட்டணம்.—தென்கிழக்கு இஙகிலாந்து.

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.—ருஷ்ய அரண்களுக்குப் பின்.

தூரக்கிழக்கு (Far East).

கிராமங்கள்.—ராமு நதி ஓரத்தில், நியூ கினியிலுள்ள சூடெஸ்ட் (Sudest).

18—6—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) ஜில்லா.

ருஷ்யா (Russia).

ருஷ்ய போக்குவரத்து ஸ்தலங்கள்,—மத்திய யுத்த அரஙகம்.

தூரக்கிழக்கு (Far East).
நியூ கினியிலுள்ள போர்ட் மோர்ஸ்பி (Port Moresby).

19—6—43 (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம், தெற்கு இங்கிலாந்தில் ஒரு இடம்.

ருஷ்யா (Russia).
லெனின்கிராடிற்கு அருகில் வால்கோப் (Volkov).

தூரக்கிழக்கு (Far East).
நியூ கினியிலுள்ள ஒரோ கடல் (Oro Bay), ஸொபூடர் (Soputa).

20—6—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).
ஒரு இடம்.—தென்கிழக்கு இங்கிலாந்து.

ருஷ்யா (Russia).
ஜனத்தொகுதியுள்ள இடம்.—வால்காவின் மேல்கரைப் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).
நேசதேச சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள பேனுபேனு (Benabena).

21—6—43. (திங்கட்கிழமை.)

பிரிடன் (Britain).
லண்டன் பிரதேசம்.—விமான எச்சரிக்கை மட்டும்.

ருஷ்யா (Russia).
விமான நிலயம்.—லெனின்கிராடிற்கு அருகில்.

தூரக்கிழக்கு (Far East).
ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் **துறைமுகம்** (22 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

யுத்தக் குறிப்புகள்.

ஆருவது ஜார்ஜ் மன்னர்பிரானின் வட ஆபிரிக்கா விஜயம். சென்ற வாரம் சனிக்கிழமையன்று மன்னர்பிரான் வட ஆபிரிக்காவுக்கு வந்தது முதல் அநேக அலுவல்களை கவனித்து வருகிருர். டிகால், கிராட், காட்ரூ முதலிய ஜெனரல்களுக்கு பேட்டியளித்தார், நேசதேச தரைப்படை, கடற்படைகளைப் பார்வையிட்டார். யுத்தத்தில் அழிவுற்ற டூனிஸிய நகரங்களையும் பான்டலேரியாவிலிருந்து வந்திருக்கும் இதாலியக் கைதிகளையும் கண்ணுற்ருர். சிகிச்சை அளிக்கும் முகாம்களையும் பார்வையிட்டார். இறந்துபோன பிரிடிஷ், அமெரிக்கப் படைகளின் ஞாபகார்த்தமாக புதை குழிகளின் பேரில் மாலைகளைச் சூட்டினுர். துருப்புகளோடு தாராளமாகக் கலந்து சம்பாஷணையும் செய்தார். இந்த நடவடிக்கை ஆஜின் கோர்ட் யுத்தத்துக்கு முன் ஐந்தாவது ஹென்றி துருப்புகளுடன் சல்லாபம் செய்ததை ஞாபகமூட்டுகிறது. டூனிஸியாவின் கடற்கரைப் பிரதேசஙகளில் கார் பொரல் நிம்ஸையும், லெப்டினெண்ட் பார்டால்ஸையும் பிராசீனர்களான பிஸ்டல்ஸ்களையும், வில்லியம் பாட்ஸஸ் முதலியோரையும் சந்தித்து அவர்களுடன் சகோதரபாவமாக சம்பாஷித்தார். துருப்புகள் ஞாயிற்றுக்கிழமையன்று நீந்தி விளையாடிக் கொண்டிருந்தபொழுது மன்னர் அங்கு சென்ருர். இவரைக்கண்டு "இவர் மிகவும் நற்குணமுள்ளவர்" என்று துருப்புகள் கானம் செய்தனர். மற்ருெரு இடத்தில் அன்னுசிப் பழத்தோட்டத்தில் மன்னர் சிற்றுண்டி அருந்தினுர். கரடுமுரடான மர மேஜைகளின் பேரில் நீக்ரோ சமையல்காரர்களால் அலுமினியம் உணவு டப்பிகளிலிருந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது. டாமினிக் அல்பானிஸியோ என்ற சிப்பாய் பழைய காகி அங்கியைக் கத்திரித்து மன்னர் சூரிய வெப்பத்தில் கஷ்டப்படாதபடி தடுப்பதற்கு அவருக்காக நீண்ட கைப்பட்டிகளைத் தயாரித்துக்கொடுத்தான். மன்னர், ஒவ்வொரு முகாமுக்கும், ஒவ்வொரு காவல் ஸ்தலத்துக்கும், ஒவ்வொரு கூடாரத்துக்கும் கால் நடையாகச்சென்று பார்வையிட்டார். வட ஆபிரிக்காவிலுள்ள எல்லோரையும் பார்த்து புன்சிரிப்புடன் நல்வரவுகூறி அவர்களைச் சகோதரர்களென்றும், ஸ்நேகிதர்களென்றும், தேசமக்களென்றும் முகமலர்ச்சியுடனும் அகமகிழ்சியுடனும் அழைக்கிருர். கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அவருடைய ஆசிருதியைக்கண்டு ஆச்வாசமடைகின்ருர்கள். சூரியன்போல் அவருடைய பார்வை அமிருததாரையை எங்கு பார்த்தாலும் வர்ஷித்துவிடுகிறது.

மன்னர்பிரான் இப்பொழுது ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்தது, அவர் பல இடங்களுக்கு விஜயம் செய்ததின் தொடர்ச்சியேயாகும். இதற்குமுன் யுத்தம் ஆரம்பித்தது முதல் மன்னர் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மூவகைப்பட்ட படைகளையும் தொழிற்சாலைகளையும், இங்கிலாந்திலுள்ள யுத்த வீரர்களையும், உள்நாட்டு பாதுகாப்புப்படைகளையும், பிரிடிஷ் துருப்புகளையும், அமெரிக்கப் படைகளையும், பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் வெடி குண்டுகளால் சேதமுற்ற பிரதேசங்களையும் பார்வையிடச்சென்று ஜனங்களுடன் கலந்து கொண்டு தன்னுடைய அன்பை வெளிக்காட்டினுர்.

மன்னர்பிரானின் அனுதாபத்தினாலும், கஷ்டங்களைத் தானும் அனுபவித்துக் காட்டிய தாலும் இந்த யுத்தமானது சம்பூர்ணமான யுத்தமென்றும் இதில் அரசனுக்கும், ஆண்டிக்கு முள்ள வித்தியாசம் அகன்றுவிட்டதென்றும் அவர் வெளிக்காட்டியிருக்கிறார். கிழக்கு லண்டன் தாக்கப்பட்டதுபோல் மன்னரின் வாசஸ்தலமாகிய பக்கிங்காம் அரண்மனையும் வெடிகுண்டுகளுக்கு இலக்காயிற்று. கெண்ட் பிரபு இறந்தபொழுது அவருக்கு அளவற்ற துயரமும் ஏற்பட்டது. வட ஆபிரிக்காவுக்கு மன்னர் விஜயம் செய்து எல்லோருடனும் கலந்துகொண்டதன் மூலம் அவரிடம் ஜனங்களுக்கிருந்த ராஜ விசுவாசம் அதிகரித்துவிட்டது. வருங்காலத்தில் வெற்றிபெறுவதற்கு எவ்வித கஷ்டங்களையும் அனுபவிக்க ஜனங்களுக்கு ஆர்வமும் ஏற்பட்டுவிட்டது.

இந்த விஜயமானது சர்வஜன ரஞ்சகமாக மட்டும் நடைபெறவில்லை. இதில் அன்பின் மிகுதியும், வட ஆபிரிக்காவில் வெற்றிபெற்ற துருப்புகளின் தீரத்துக்குப் புகழுரையும் நிரம்பியிருக்கிறது. புதிதாக முன்னேற்ற யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு இது சூசகமாகும். இதற்குமுன் பிரிடனை விட்டு வெளியேசென்று துருப்புகளைப் பார்வையிட்டது, 1940-ம் வருஷத்தில் பிரான்ஸிலிருந்த பிரிடிஷ் படைகளைப் பார்க்கச்சென்ற பொழுதுதான். மூன்று வருஷமாக நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு அந்த விஜயம் பூர்வாங்கமாகும். இந்த விஜய மானது முடிவடைந்து வரும் உலக நாடகத்துக்கு முடிவுரையென்று சொல்லாம்.

ஞாயிற்றுக்கிழமையன்று நமது மன்னர் மால்டா தீவுக்குச்சென்றார். ஏராளமான துருப்புகளும் பொதுமக்களும் உரக்க சப்தித்து அவரை வரவேற்றார்கள். மாதாக்கோவில் மணிகள் ஒலித்தன. இங்கு மால்டாவின் கவர்னரான கார்டு பிரபுவுக்கு பீல்ட் மார்ஷலின் தடியை அவர் வழங்கினார். இதைவிட்டுப் புறப்படும்பொழுது கீழ்கண்ட செய்தியை விடுத்தார்.

“வட ஆபிரிக்காவுக்கு நான் விஜயம் செய்த சந்தர்ப்பத்தை ஒட்டி மால்டாவுக்கும் விஜயம் செய்யவேண்டுமென்று ஆவல் கொண்டேன். அங்கிருக்கும் துருப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் சார்பாக என்னுடைய சந்தோஷத்தை அறிவிக்கிறேன். உங்களுடைய வரவேற்பு என்னுடைய மனதைக் கவர்ந்து விட்டது. எதிரிகளின் பலமான தாக்குதல்களைச் சமாளித்து நின்ற இந்த அரணிலுள்ளவர்க ளின் ராஜ விசுவாசத்துக்குச் சிறந்த அத்தாக்ஷியும் கிடைத்துவிட்டது. மால்டா மக்க ளுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன். நாம் நிச்சயமாக எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் சுபிக்ஷமான காலம்கூடிய சீக்கிரம் ஏற்படவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்கிறேன்.”

வி வி வி வி வி

மனத் துயரம். சில வருஷங்களுக்குமுன் ஜெர்மானியர்கள் நமது மனோ நிலையைக் கலக்கி வந்தார்கள். காலம் தலைகீழாக மாறிவிட்டது. இப்பொழுது எதிரி சஞ்சலப்படுகிறான். மன்னர்பிரானின் ஆபிரிக்கா விஜயத்திலிருந்து படையெடுப்பு பயம் ஜெர்மனியில் அதிகரித்துவிட்டது. நேசநாடுகளின் எண்ணங்களை அறியும் பொருட்டு ஜெர்மன் பிரசாரகர்கள் புதுமாதிரியான பிரசார முறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கிறார்கள். ஜூன் மாதம் 16-ம் தேதியன்று ஜெர்மனியின் சார்பாக உள்ள ஸ்வீடிஷ் அல்லகொண்டா பத்திரிகையின் விசேஷப் பதிப்பில் நம்பத்தக்க ஆதாரத்தி லிருந்து கிடைத்த தகவல், என்று ஒரு கதை எழுதப்பட்டிருக்கிறது. ஸ்டாக் ஹோமிலுள்ள ஒரு ஹோட்டலில் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் சமாதானப் பேச்சுகள் ரகசியமாக நடை பெற்றதாம். இந்தப் பேச்சுகளில் ஸ்வீடனிலிருக்கும் ருஷ்ய மந்திரியான மாடம் கொல்லாண்ட் ரியும் ஜெர்மனியின் சில உயர்தர அதிகாரிகளும் கலந்து கொண்டார்களாம். ஜெர்மனி ப்ரஷியாவை எடுத்துக்கொள்வதென்ற பேச்சை ருஷ்யா ஒப்புக்கொண்டபோதிலும், ஜெர் மனி யூக்ரேனையும் அடைய விரும்பியதாலும், ருஷ்யா சம்மதிக்காததாலும் சமரஸப் பேச்சு கள் முறிவு பெற்றன என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுக்கதையின் ஸ்வாரஸ்யம் யாதெனில், அதே பத்திரிகையில் இந்த விருத்தாந்தம் பிசகென்று வெளியிடப்பட்டதும், சம்பாஷணை நடைபெற்றதாகச் சொல்லப்படும் இடத்தைவிட்டு மாடம் கொலாண்ட்ரி அநேக மாதங்களுக்கு முன்னே வெளியேறிவிட்டதும், அவனே இந்தக் கதையானது ஆபாசமான, பிரசார முறையில் செய்யப்பட்ட புளுகு என்றும் சொல்லியிருப்பதும்தான். ஸ்டாலின் இந்த குட்டை வெளிப்படுத்திவிட்டான். ஜூன் 17-ம் தேதியன்று மாஸ்கோவில கூடியிருந்த போலிஷ் தேசாபிமானிகள் கூட்டத்திற்கு ஸ்டாலின் அனுப்பிய செய்தி பின்வருமாறு:—“நமது பொதுவான எதிரியான ஜெர்மனியை முறியடிப்பதற்கான முறைகளை ருஷ்யா சீக்கிரமாகக் கையாளுமென்று நீங்கள் நம்புங்கள். அதன் மூலம் போலிஷ் ருஷ்ய நட்பும் பலப்படும். வலுவான ஸ்வதந்திரமுள்ள போலந்து ராஜ்யத்தைத் திரும்பி அமைப்பதற்கும் நாங்கள் ஒத்தாசையளிப்போம்.”

எதிரிக்கு ஏற்பட்ட திகில் அவனைக்கலங்கும்படி செய்துவருகிறது. ஸிரியா பக்கமுள்ள துருக்கி எல்லை போக்குவரத்துக்கு மூடப்பட்டதென்பதும், துருக்கி எல்லைச்சரகத்திலும், ஸைப்ரஸிலும், பிரிடிஷ் துருப்புகள் குவிக்கப்படுவதும், ஒரு யுத்தக்கப்பல், இரண்டு விமானம் தாங்கிகள், 10 நாசகாரிகள் கொண்ட, 75 கப்பல்கள் ஜிப்ரால்டருக்கு வந்திருப்பதும், ஸ்காட்லந்திலிருந்து ஸிரியாவரைக்கும் வலுவான துருப்புகள் வைக்கப்பட்டு சேர்ந்தாற்போலோ அல்லது வரிசையாகவோ தாக்குதல் செய்யப்படுமென்று டெயிலி மெயில் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் ரிபோர்ட்டுகளும், ஸிஸிலி முதல் லக்ஷியமாகவோ அல்லது கடைசியாகவோ தாக்கப்படுமென்ற திட்டமும் எல்லாம் சேர்ந்து ஹிட்லருக்குச் சங்கடம் உண்டாக்கிவிட்டன. அவன் திகைத்து நிற்கிறான். இதற்குமுன் படையெடுப்பு ஏற்படலாமென்றும் இப்பொழுதிருப்பதுபோல் சீக்கிரமாக நடைபெறுமென்றும் அவன் நினைத்த காலத்தில் ஜெர்மன் பிரசாரர்கள் மார்தட்டிக்கொண்டு "ஐரோப்பிய அரண்கள் பிளக்க முடியாதவைகள்" என்று சொல்லிவந்தார்கள். ஏப்ரல் 13-ம் தேதியன்று ஸீஸன் ரேடியோவில் "எதிரி வரட்டும் மற்றொரு டிப்பியை நடத்திக்காட்டுவோம். அவனை நன்றாய்ப் புடைத்துவிடுவோம். வடக்குமுனையிலிருந்து மத்தியதரைக்கடல் வரையிலுள்ள ஐரோப்பியக் கடற்கரை பூராவும் நாம் அரண் கட்டிவிட்டோம். அரண்களில் 20-வது நூற்றாண்டின் கோரமான முஸ்தீப்புகளை அமைத்திருக்கிறோம். எதிரி எவ்வளவு கோரமாகவும் பலமாகவும் தாக்கினாலும் பயன்படாது" என்று ஒலிபரப்பியது. மற்றொரு சமயத்தில் "விஸ்தாரமான அரண்களெல்லாம் மேற்குப்பக்கமுள்ள அரணையும் மாஷினோ அரணையும் கட்டிய அனுபவத்தையும் கிழக்குப் போர்முனையின் அனுபவத்தையும் ஒட்டி நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. மாஷினோ அரணில் வைக்கப்பட்டிருந்த பீரங்கிகள் 180 டிகிரி வரையில் அசைந்து அடிக்கக் கூடியவை. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் பீரங்கிகள் பூராவும் சுழன்று வேலை செய்யக் கூடும். அட்லாண்டிக் அரணைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் தரையிலிருந்து சந்திரமண்டலம் வரைக்கும் ஒரே எஃகு மயம். அதில் உபயோகப்பட்டிருக்கும் கான்க்ரீட்டைக்கொண்டு பெர்லினிலிருந்து ஸாலமன்ஸ் வரையில் ஒரு ரஸ்தா போட்டுவிடலாம். சைனாவிலுள்ள பெரிய அரணைவிட இந்த அரண் 200 கிலோமீடர் அதிக நீளமுள்ளது" என்று சொல்லப்பட்டது.

மத்தியதரைக்கடலிலும் தீவுகள் வீழ்ச்சியடைந்தபிறகு பிரசார த்வனி மாறிவிட்டது. ஐரோப்பாவுக்குத் தெற்குப்பக்கத்தில் அரணில்லையென்றும், இதாலி மிகவும் அபாயமான பிரதேசமென்றும் துருக்கியின் எண்ணங்கள் சந்தேகமானவையென்றும் அட்லாண்டிக் அரணும் பலமற்றதென்றும், மற்ற அரண்கள் போலவே இதுவும் விழுந்துவிடுமென்றும், ஆகிலும், ஆறுதலாக, அட்லாண்டிக் அரணுக்கும் ஜெர்மன் எல்லைச்சரகத்துக்குமிடையே சண்டைபோடக்கூடிய பிரதேசம் அதிகமாயிருக்கிறதென்றும் இப்பொழுது சொல்லப்படுகிறது. நம்பிக்கைக்குறைவு ஏற்பட்டு தற்காப்பு முறைகளைக் கையாளுவதோடும், வெளிப்பக்கத்திலுள்ள எதிரியின் தொந்தரவும் உள்நாட்டுக்குழப்பமும் அதிகரித்துவிட்டன.

ஜெர்மனியில் வேலை செய்யும் அயல்நாட்டுத் தொழிலாளர்களைப்பற்றி எழுதும்பொழுது, பெர்லின், லீப்ஸிக், டிரெஸ்டன் முதலிய இடங்களுக்குச் சென்றிருந்த ஸ்வீடிஷ் ஆர் பொடிட் பத்திரிகையின் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

"நாடெங்கும் ஒரே குழப்பமும் ஆரவாரமும் நிரம்பியிருக்கிறது. எங்குபார்த்தாலும் யுத்தக்கைதிகள் நடமாடுகிறார்கள். ஜெர்மனியில் வேலைசெய்துவரும் 5 மிலியன் அயல்நாட்டு தொழிலாளர்களுக்கிடையே அநேகர் ராஜீயக் கிளர்ச்சியை உண்டுபண்ணிவருகிறார்கள். ஜெர்மன் தொழிலாளர்களின் தலைவருடன் சிறிது சம்பாஷணை செய்தால், அயல்நாட்டு தொழிலாளர்களின் பெருக்கிலிருந்து ஜெர்மன் தொழிலாளர்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்பது புலப்படும்."

வி வி வி வி வி

ஜெர்மன் விமானப்படை. அநேக அம்சங்களில் விமான யுத்தமும் கடற்படை யுத்தமும் ஒரேவிதமாகயிருக்கிறது. கடலிலும் ஆகாயத்திலும் ட்ரபால்கர் போன்ற ஒரு சண்டை நடைபெற்றபின் யுத்த முடிவுக்கு வாடர்லூ போன்ற ஒரு நில யுத்தம் நடைபெறவேண்டும். ட்ரபால்கர் கடற்சண்டையின் மூலம்தான் வாடர்லூவில் வெற்றிகிடைத்ததென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆகாயத்தில் நமக்கு ஏற்படும் வெற்றிகள் நில யுத்தத்தில் வெற்றிக்கு அடிப்படையானதென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதை விவரணம் செய்வோம். கிழக்கு, வடக்கு, தெற்கு, ஆகிய மூன்று திசைகளிலிருந்து வளைத்துவரும் நேசதேச விமானப்படையின் தாக்குதலினின்றும் தன்னுடைய தளத்தைக் காப்பாற்றுவதற்கு கடலிலிருக்கும் கப்பற்படையைப்போல் ஜெர்மன் விமானப்படை முயன்றுவருகிறது. இதற்காக ஜெர்மன் விமானப்படை ஐந்து பகுதிகளாக வேலை செய்துவருகிறது.

பிராந்தியம்.		படைத்தலைவர்.	படைப் பலம்.
1. வட ருஷ்யா	...	கெல்லர்.	1,250 விமானங்கள்.
2. மத்தியதரைக்கடல்	...	கெஸ்ஸரிலிங்	800 ,,
3. ஜெர்மனி, மேற்கு ஐரோப்பா	...	ஸ்பெரல்	1,500 ,,
4. தென் ருஷ்யா	...	வான்ரிச்டாபன்	1,250 ,,
5. நார்வேயும், பின்லாந்தும்	...	ஸ்டம்ப்	200 ,,
			5,000

ஆங்கிலேய, அமெரிக்க, ருஷ்ய விமான உற்பத்தியின் பெருக்கினாலும், நேசதேச விமானப் படையெடுப்பின் தொந்தரவினால் ஜெர்மன் உற்பத்திக்கு ஏற்பட்டிருக்கும் சிரமத்தினாலும், ஜெர்மன் விமான நஷ்டங்களின் மூலமாகவும், கெல்லருக்கும், ரிச்டாபனுக்கும் கிழக்குப் போர்முனையில் 1,000 மைல்கள் நீளமுள்ள போர்முனையில் ருஷ்யர்களைச் சமாளித்து வருவதே சிரமமான காரியமாகயிருக்கும். மற்ற யுத்தமுனைகளிலிருந்து உபபலம் வந்தால் சாதகமாயிருக்குமென்று அவர்கள் நினைக்கலாம். ஸ்பெர்லா என்பவனுக்கு அபாரமான அலுவல்களிருக்கின்றன. டென்மார்க் முதல் ஸ்பெயின் வரையிலுள்ள பிரதேசங்களில் படையெடுப்பு ஏற்பட்டால் அதைத்தடுக்கத் தேவையான தற்காப்புப்படையை அவன் தயாராக வைத்திருக்கவேண்டும். டென்மார்க், ஹாலந்து, பிரான்ஸ், ரூர் முதலிய இடங்களிலுள்ள ஆயுதம் செய்யும் தொழிற்சாலைகளையும் போக்குவரவு மார்க்கங்களையும் பால்டிக் துறைமுகங்களையும், ஸெகொஸ்லாவோகியாவையும் ரக்ஷிக்கவேண்டும். யூ-படகுகளின் தளங்களுள்ள பிஸ்கே விரிகுடாவில் 400 மைல்கள் தூரம் இரவு பகலாக ரோந்துசெய்ய விமானங்களை அனுப்பவேண்டும். ரோந்து செய்யாவிட்டால் யூ-படகு யுத்தத்துக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும். ஸ்டம்ப் என்பவன் தன்னுடைய குறைவான 200 விமான பலத்துடன் நார்வேயையும் பின்லாந்தையும் காப்பாற்றவேண்டும். கெஸ்ஸல்ரிங் என்பவன் 800 விமானங்களின் உதவியுடன் வட ஆபிரிக்கா தளங்களிலும் மால்டாவிலுமுள்ள ஆங்கிலோ அமெரிக்க விமானப்படையின் தாக்குதலைச் சமாளித்துவரவேண்டும். அவனிடமுள்ள குறைவான விமானப்படை பலத்துடன் இதாலி, கிரீஸ், ஸிஸிலி, ஸார்டீனியா, கிரீட், டொடிகனிஸ் முதலிய இடங்களையும் தற்காப்பு செய்யவேண்டும். ஏஜியன் கடலிலிருந்து அவன் வேறு இடத்திற்குச்சென்றால் பால்கன் நாடுகள் ரக்ஷணையற்று தாக்குதலுக்குட்படும். இவ்விதமாக ஜெர்மன் விமானபலம் பல்வேறு இடங்களில் சிதறிக்கிடக்கின்றது. ஆங்காங்கு அதற்குப் பூர்ணமான வேலையிருக்கிறது. ஆகையால் ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்துக்கு விமானங்களை அனுப்ப இயலாது. எல் அலமீன் யுத்தத்துக்குப்பின் 2-வது ஜெர்மன் விமானப்படை இரண்டு தடவைக்குமேல் புதிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். மத்தியதரைக்கடலில் மேமாதத்தில் மட்டும் 337 விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன. ஜெர்மன் உற்பத்திக் குறைவினின்றும் ஜெர்மனிக்கும் நேசதேச விமானப்படைக்குமுள்ள வித்யாசம் அதிகரித்துவருகிறது. ஆகையால் 2-வது ஜெர்மன் விமானப்படையானது இதாலிய முனையில் சண்டைபோட வேண்டிருக்கிறது. அது தோல்வியடைவதுடன் அது இதாலியையுமிழந்துவிடும். 3-வது ஜெர்மன் விமானப்படையும் ஜெர்மன் முக்கியஸ்தானங்களை நேசதேச விமானங்கள் தாக்குவதிலிருந்து குறைந்துகொண்டேவருகிறது. இவ்விதமாகத்தான் ஆகாயத்தில் டிரபால்கர்போன்ற ஒரு யுத்தம் நடைபெறுகிறது. ஆகாயத்தில் வெற்றிபெறுவதன் மூலம் கூடிய சீக்கிரம் தரையிலும் வாடர்லூ போன்ற ஒரு முடிவான யுத்தத்தையும் நாம் எதிர்பார்க்கலாம்.

வி வி வி வி வி

இதாலியக் கடற்படை எங்கே? பாண்டலேரியா சரணடைந்த தினத்தன்று இதாலியக்கடற்படை தினம் கொண்டாடப்பட்டது. அன்று கடற்தளபதி டோனிட்ஸும் கடற்தளபதி ரிகார்டையும் ஒருவருக்கொருவர் ஆசி கூறினார்கள். பதக்கங்கள் ஏராளமாக வழங்கப்பட்டன. ஸ்தோத்திரம் செய்து ஒலிபரப்புப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன். ஜூன்மீ 11-ம்தேதி பெர்லின் ஒலிபரப்பில் கடற்தளபதி டோனிட்ஸ் பின்வருமாறு கூறினார். "எதிரியை எதிர்த்து இதாலியும், ஜெர்மனியும் செய்துவரும் மகத்தான யுத்தத்தினின்றும் பாஸிஸ்டு சாம்ராஜ்யத்தின் ஸ்வதந்திரமும், கௌரவமும் நிலைபெற்றுவிடும். இதாலியக் கடற்படை மாலுமிகளின் சோர்வடையாத மனோதிடமும், வீரமும் வெற்றி நிச்சயமென்று உறுதிப்படுத்துகிறது. இதாலியக் கடற்படை நேசதேசக் கடற்படைக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இன்னும் அநேக அரியவேலைகளையும் செய்திருக்கிறது. இந்த இரண்டாவது உலக யுத்த சரித்திரத்தில் இதாலியக் கடற்படையின் புகழும் உரைக்கப்படவேண்டும்.

இப்பேற்பட்ட கடற்படை எங்கு சென்றுவிட்டது. இதுவரையில் அது யுத்தம் செய்ய செய்ய முன் வரவில்லை. பிரிடிஷ் கடற்படையைச் சந்திக்கும்படி நேரிட்ட சில சமயங்களில் இருட்டிலோ அல்லது புகையின் மறைவிலோ தப்பி ஓடிவிட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இதற்கு ரக்ஷணையாக விமான பலமுமில்லை; நாசகாரிகளுமில்லை. ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை இழந்தபிறகு, நாசகாரிகளின் உதவியுடன் வட ஆபிரிக்காவுக்குச் சாமான்களை அனுப்பும் அலுவல் நின்றுபோய்விட்டது. ஆகையால் அவைகளை யுத்தக் கப்பல்களுக்குத் துணையாக அனுப்பலாம். இதாலியின் பெரிய கப்பல்கள் இனிமேல் மத்தியதரைக் கடலைத் தாண்டமுடியாது. ஏட்ரியாடிக், டிர்ரீனியன், லிகூரியன் கடல்களில் மட்டும் கொஞ்சம் நடமாடலாம். ஆகிலும் சந்தர்ப்பத்தை முன்னிட்டு ஒளிந்திருந்ததை விட்டு, யுத்தம் செய்ய கடற்படை முன்வரலாம். தங்கியிருப்பதென்பது துறைமுகத்தில் தயாராக நின்றுகொண்டிருப்பது எதிராளியின் கடற்படை எப்பொழுதும் உஜாராகயிருக்கும்படி செய்துவிடுவது. இந்தத் தற்காப்பு முறைகள் இனிமேல் பயன்படாது. ஐரோப்பாவுக்கு படையெடுப்பு பயம் ஏற்பட்டுவிட்டதால், நேசதேசங்களின் கடற்படையைத் தாக்க இதாலிய கடற்படை முன் வரவேண்டியதுதான்.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. ஜூன் மாதம் 22-ம் தேதியன்று ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெறும் யுத்தத்தின் மூன்றாவது வருஷ ஆரம்பமாகுகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன் தன்னுடைய சிநேகிதனும், அயல் வீட்டானுகிய ருஷ்யாவைச் சுலபமாக முறியடித்துவிடலாமென்று நினைத்து ஜெர்மனி துரோகமாக அடிக்க ஆரம்பித்தது. ருஷ்யாவை ஆறு வாரங்களில் முறியடித்துவிடுவேனென்று ஜெர்மனி பீத்திக்கொண்டது. சென்ற வருஷத்திய மாரிகால யுத்தத்தின்மூலம், ஸ்டாலின்கிராட்டில் ருஷ்யாவுக்கு வெற்றியும், டொக், வால்கா நதிப்பிரதேசங்களிலிருந்து 700 கிலோமீடர்கள் வரை ஜெர்மானியர்கள் பின் வாங்கியதும் நடைபெற்றது. இதன்மூலம் யுத்தப்போக்கு மாறுதலடைந்தது. இரண்டு வருஷ யுத்தத்தில் ஜெர்மனிக்கு ஏராளமான நஷ்டமேற்பட்டது. 64,00,000 மனிதர்களும், 56,000 பீரங்கிகளும், 42,400 டாங்கிகளும், 43,000 விமானங்களும் நஷ்டமாயின. மற்ற அம்சங்களிலும் ஜெர்மனியின் நிலைமை குன்றிவிட்டது. விமானத் தாக்குதலிலிருந்து ஜெர்மனியின் தளவாட உற்பத்தி குறைந்துவிட்டது. பின்னணியில் தேச பக்தர்களின் கிளர்ச்சிகள் உண்டாகுகின்றன. இதாலி-ஜெர்மன் ஒற்றுமை குறைந்துவிட்டது. நேசநாடுகளுக்குள் பிளவு ஏற்படுத்தவேண்டுமென்று கோயபல்ஸ் செய்த முயற்சிகள் வீணாகிப்போய்விட்டன. ஹிட்லரின் கால அட்டவணையை டூனிஸியாவில் ஏற்பட்ட தோல்வி கவிழ்த்துவிட்டது. இதன் பயனாக ஹிட்லர் அவசரப்படாமல் கிழக்குப் போர்முனையில் தற்காப்பு முறைகளைக் கையாள வேண்டும். ஆகையால் ஜனவரி மாதம் 30-ம் தேதியில் கோயரிங்கும், பிப்ரவரி மாதம் 18-ம் தேதியில் கோயபல்ஸும் ஆடம்பரமாக வெளியிட்ட 1943-ம் வருஷத்திய முன்னேற்ற யுத்தப்பேச்சு இப்பொழுது ஜெர்மன் பிரசாரங்களில் காணப்படவில்லை.

இந்த முடிவுக்கு வந்ததற்கு ஹிட்லர் மட்டும் காரணமாகயிருக்கமுடியாதென்று சொல்லலாம். ஹிட்லரின் கௌரவமும் போய்விட்டது. ஸ்டாலின்கிராட் யுத்தத்துக்குப் பின் ஜெர்மன் நடவடிக்கைகள் ஹிட்லரின் யோசனைகள்படி நடைபெறவில்லை. ஹிட்லர் துருப்புகளுக்கு சர்வாதிகாரியாகவிருந்தபோதிலும், ஹிட்லரின் வீராப்புக் குறைந்து நிபுணர்களின் யோசனையை ஏற்றுக்கொள்ளும் நிலைமையை அடைந்துவிட்டான். நிலைமை மோசமாகிவிட்டதென்பதையும், ருஷ்ய யுத்தத்தை முடித்துவிட்டு மேற்கே திரும்புவது அசாத்தியமான காரியமென்றும் ஜெர்மன் அதிகாரிகள் தெரிந்துகொள்ளவேண்டும். கிழக்குப் பிராந்தியத்தில் முடிவான யுத்தத்தை நடத்துவதிலிருந்து ஜெர்மனியின் வீழ்ச்சி நிச்சயம் என்று அவர்கள் அறியவேண்டும். ஆகையால், பாக்கியிருக்கும் முஸ்தீப்புகளைச் சேகரித்து தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அவைகளை உபயோகிப்பதும் ராஜீய முறைகளில் சமாதானம் ஏற்பட வழிதேட வேண்டியதும்தான் தற்போதிய யுத்த தந்திரமென்றும் அவர்கள் ஆலோசனை செய்திருக்கவேண்டும்.

ஜெர்மனியைப் பலமாகத் தாக்குவதற்கு இதுதான் நல்ல தருணம்.

வி வி வி வி வி

இந்திய நிர்வாகத்தில் மாறுதல். பீல்ட் மார்ஷல் வேவலை இந்திய வைஸ்ராயாகவும், ஜெனரல் ஆசின்லக்கை இந்திய சேனாதிபதியாகவும் நியமனமும் கிழக்கு ஆசியாப் படைகளுக்கு ஒரு புதிய சேனாதிபதியும் நியமித்ததும் தூரக்கிழக்கில் ஒரு புதிய யுத்த தந்திரத்தை ஏற்பாடு செய்ததாகும். சாம்ராஜ்யத்திலும் உலகத்திலும் முதன்மையான சிப்பாயும், எதிரி நடுநடுங்கக் கூடியதுமான வேவலிடம் இந்தியாவின்

ஆகூதியை ஒப்படைத்ததும், எல் அலாமீனில் ரோமலேத் தேக்கிவைத்ததும் படைகளை ஏற்பாடு செய்வதில் நிபுணனுமான ஜெனரல் ஆசின்லெக் சேனாதிபத்யமும் சேர்ந்து இந்தியாவின் அபிவிருத்திக்குச் சாதகங்கள். கிழக்கு ஆசியா படைகளிலிருந்து இந்தியா துண்டாடப் பட்டுவிட்டதால் இந்தியாவின் தற்காப்புகளைப் பூராவாக ஏற்பாடு செய்யவும், சாம்ராஜ்யத்தின் ஆயுதசாலையாக அபிவிருத்தி அடையவும் இந்தியாவுக்கு வசதியேற்பட்டுவிட்டது. கிழக்கு ஆசியாவில் தனிப்பட்ட சேனாதிபதி நியமிக்கப்பட்டதிலிருந்து தூரக்கிழக்கில் தற்காப்பு முறையைவிட்டு நாம் முன்னேறித் தாக்கும் துவக்குவதற்கு அஸ்திபாரம் போடப்பட்டுவிட்டது. இந்தியாவுக்கு ஜப்பானிடமிருந்து பயம் நீங்கிவிட்டதோடு, ஜப்பானை முறியடிப்பதற்கு இந்தியாவும் தன்னாலியன்ற வரையில் ஒத்தாசை செய்யுமென்று பொருள்படுகிறது.

வி வி வி வி வி

அரக்கான். படையெடுப்புக்கு பாதகமாக இப்பொழுது பருவகாலம் வந்துவிட்டது. ஆகிலும் இச்சமயத்தில் மழைகாலத்துக்குப்பின் ஏற்படப்போகும் தாக்குதலுக்கு வேண்டிய முஸ்தீப்புகளை நாம் இப்பொழுது தயார்செய்து கொள்ளலாம். அரக்கானுக்கு பிரிடிஷ்படைகள் சமீபகாலத்தில் முன்னேறியது. பர்மாவில் பெரிய நிகழ்ச்சியில்லை. பர்மாவில் வெற்றிகரமாக நடவடிக்கை செய்யவேண்டுமானால் கடல்மார்க்கமாக ஒத்தாசை கிடைக்கவேண்டும். ரெங்கூன், மோல்மீன், லாஷியோ முதலிய இடங்களைத் தாக்கி பர்மா ரஸ்தாவை அடையவேண்டும். அரக்கானில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மூலம் ஆசியாவை அடைவது என்பதுதான் முக்கிய நோக்கம். கல்கத்தாவைத் தாக்க உபயோகமுள்ள ஒரு விமான தளத்தைப்பிடித்துக்கொண்டு ரெங்கூனையும் மாந்தலேயையும் அங்கிருந்து தாக்கலாமென்று நேசநாடுகள் யோசனைசெய்தன. இந்த பிரயத்தனம் வீணானதற்கு தூரதேசமும், ஸ்தலஅமைப்பும், போக்குவரவுக் குறைவும் காரணங்களாகும்.

மழை காலத்திற்குள்ளாக விமான தளங்களும், ரஸ்தாக்களும், பாலங்களும், கப்பல் துறைமுகங்களும் ஏற்பாடுசெய்து மாரிகாலத்தில் யுத்தம் மறுபடியும் துவங்கப்படும்.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த முயற்சிகள். 17—6—43-ம் தேதி வெளியிட்ட பிரசுரம் மூலகாக எண்ணெய் வித்துகள் (அதாவது மணிலாக்கொட்டை, ஆளிவிதை, கடுகு விதை, எள்ளு) சம்பந்தமாக 1943-ம் வருஷம் ஜூன் மாதம் 16-ம் தேதிக்குப்பிறகு நூதனமான ஒப்பந்தங்கள் செய்யக் கூடாதென்று புதுக்கோட்டை தர்பார் அவர்கள் தடை செய்திருக்கிறார்கள். அந்தத் தேதியில் பாக்கியாகயிருக்கும் ஒப்பந்தங்கள் அரசாங்கத்தால் குறிப்பிடும் காலத்தில் ரத்தாகிவிடும்.

அரசாங்கத்தாரின் உத்தரவில்லாமல் நெசவுத்தொழிலில் உபயோகப்படும் ஸ்பூல்களை விற்பனை செய்வதோ வேறு விதமாக மாற்றிவிடுவதோ கூடாதென்று மற்றொரு உத்தரவின்படி தடைசெய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த உத்தரவு கீழ்கண்ட சாமான்களுக்கு அன்வயிக்கும்.

(1) முறுக்கேற்றும் குழாய்கள் (2) அங்குமிங்கும் செல்லும் குழாய்கள் (3) ராபத்வளையம் (4) ரிங்க்வெப்ட் பிர்ண்கள் (5) ரிங்க் டப்ளர் பாபின்ஸ், (6) தரிபோடும் ஸ்பூல்கள், (7) காகித குழாய்களும் கோன்களும்.

6—6—43 தேதியிட்ட உத்தரவின்படி காகிதங்களின் விலைவாசிகள் கீழ்கண்டவாறு நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

	மொத்த வியாபாரம் ராத்தல் விலை. ரூ அ ப.	சில்லரை வியாபாரம் ராத்தல் விலை. ரூ அ ப.
1. பளபளப்பான M. F. எழுதும் பேபர் பத்திரிகைக் காகிதம், 14 ராத்தல் டிம்மி வகையரா, (ஆர்ட், சூபர்காலண்டர், டைப்ரைட்டிங், காபி எடுக்கக் கூடியது. தேசபடம் அச்சிடுவது, மை ஒத்தும் பேபர் விர).	0 8 0	0 9 0
2. பழுப்பான ராப்பர், கார்ட்ரிஜ் காகிதம் 22×29, முப்பது ராத்தலும் அதற்கு மேலும் கனமுள்ளது.	0 7 3	0 8 3
3. சாதாரண படாமி காகிதம் டிம்மி 14 ராத்தலும் அதற்கு அதிகமானது.	0 7 5	0 8 5

விலை அதிகம்.

(a) வர்ண M. F. அச்சு, பல்ப் போர்டுகள்.	0 1 0	
(b) முன்சொன்ன ரகம் லேசான தரம் 14 ராத்தலுக்குக் குறைந்த டிம்மி.	0 1 0	
4. வெள்ளை அச்சிடும் பேபர் கிரீன் லேபல் டிம்மி 14 ராத்தலுக்குட்பட்டவை.	0 9 0	0 10 0
5. மேற்படி 14 ராத்தலும் அதற்கு அதிகமானதும்.	0 8 0	0 9 0
6. எழுதும் காகிதம் 6 ராத்தல் ...	0 9 0	0 10 0
7. ,, 8 ,, ...	0 8 0	0 9 0
9. ,, கான்குவெஸ்டு ...	0 10 0	0 11 0

நேசதேசங்களின் லக்ஷியங்கள்.

தலைவர்களின் சொற்பொழிவுகளிலிருந்து சில குறிப்புகள்.

1942-ம் வருஷம் ஜூலை மீ 2-ம் தேதியன்று போலந்தின் பிரதம மந்திரியான ஜெனரல் ஸிகார்ஸ்கி லண்டனில் பின்வருமாறு பேசினர். "ஜெர்மனி ஆரம்பித்திருக்கும் இரண்டாவது உலக யுத்தம் எல்லா அம்சங்களிலும் அசாதாரணமானது. இது ஒரு சர்வதேசப் புரட்சி. இதன் விளைவுகள் உலகம் பூராவும் சாச்வதமாகவும், பலமாகவும் பரவியிருக்கும்.

"பல ஜாதியார்களும், நிர்வாகங்களும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதிலிருந்து உலகத்தின் வருங்காலப்போக்கை நிர்ணயிக்கக்கூடிய மனித வாழ்க்கையின் உயர்தர நோக்கங்களுக்கு அடிப்படையான புதிய உலக அமைப்பின் உற்பத்தியை அது குறிப்பிடுகிறது".

1941-ம் வருஷம் நவம்பர் மாதம் 6-ம் தேதியன்று ருஷ்யாவின் பிரதம மந்திரி ஜோஸப் ஸ்டாலின் பின்வருமாறு பேசினர்:—

"ஜெர்மனியைப்போலில்லாமல் ருஷ்யாவும், அதைச் சேர்ந்த நேசநாடுகளும் ஹிட்லரின் கொடுங்கோலிலிருந்து ஐரோப்பாவின் அடிமைப்பட்ட நாடுகளையும், ருஷ்யாவையும் விடுவிக்க யுத்தம் செய்கிருர்கள். ஆகையால் விடுதலைக்காகப் பாடுபடும் துருப்புகள் என்று மதித்து ருஷ்யா, பிரிடன், மற்ற நேசநாடுகளின் படைகளை எல்லா ஜனங்களும் ஆதரிக்க வேண்டும். ஐரோப்பிய மக்களையோ அல்லது ஆசியா மக்களையோ முறியடிக்கவோ, ஐரோப்பிய நாடுகளையோ, ஆசியா நாடுகளையோ வசப்படுத்திக்கொள்ளவோ நாங்கள் சண்டைபோடவில்லை. ஐரோப்பாவில் ஸ்லாவியர்கள், மற்றும் இதர மக்களை ஜெர்மனி அடிமைப்படுத்தியிருப்பதுபோல் நாங்கள் ஐரோப்பாவில் ஆதிக்கம் பெறவும், எங்கள் அமுலை நடத்தவும் உத்தேசிக்கவில்லை. அடிமைப்பட்ட ஜனங்கள் எங்கள் உதவியை எதிர்பார்த்து வருகிருர்கள். ஹிட்லரின் கொடுங்கோலிலிருந்து விடுதலைபெற இந்நாடுகளுக்கு ஒத்தாசை செய்வதுதான் எங்கள் நோக்கம். அதன் பிறகு அவைகள் தன்னிஷ்டப்படி தங்களுடைய வாழ்க்கை முறைகளை ஏற்பாடு செய்துகொள்ளலாம். தன்னை விடுவித்துக்கொள்ளுவது தான் ருஷ்யாவின் முதல் நோக்கம். அடுத்தபடியாக ஐரோப்பாவில் அடிமைப்பட்ட நாடுகளை விடுவித்து அதன்பிறகு உள்நாட்டு வியவகாரங்களில் பிறர் தலையிடாமல் அந்நாடுகளை தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்படி செய்வது".

1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி பிரிடனின் உதவி பிரதம மந்திரியான மேஜர் ஆட்லி நியூ யார்க்கில் பின்வருமாறு பேசினர்:—

"தாங்கள்தான் உயர்வான ஜாதியார் என்றும், மற்ற ஜாதியார்கள் கீழ்ப்பட்டவர்கள் என்றும் நினைத்தும் உலகம் பூராவும் தங்கள் ஆதிக்கத்துக்குட்படவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிற எதிரிகளின் நோக்கங்களுக்கு மாருக சர்வதேசங்களிலும் ஜனநாயகம் பெருக வேண்டுமென்று நாங்கள் பாடுபடுகிறோம். ஸ்வதந்திர மக்கள் நமது பொதுவான நாகரீக முறைகளை நிலைநாட்ட அவரவர்கள் தன்னந்தனியாக ஒத்துழைக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். ஒரு நகரத்திலோ, அல்லது ராஜ்யத்திலோ, தனிப்பட்டவர்களின் ஸ்வதந்திரமானது நவீன உலகத்தில் ஸர்க்காரின் சட்ட வரம்புக்குட்பட்டதென்பதுபோல, தனிப்பட்ட ராஜ்யத்தின் ஸ்வதந்திரமானது உலக ஸ்வதந்திரத்தில் கட்டுப்படவேண்டியதும் அவசியமேயாகும். பொருளாதார, ராஜீய ஸ்வதந்திரங்கள் அழிவுபடாதபடி காப்பாற்றுவதற்குத் திட்டம்போடுவதுதான் நம்முடைய கடமையாகும்".

1941-ம் வருஷம் ஜனவரி மாதம் 6-ம் தேதியன்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பின்வருமாறு வாஷிங்டனில் பேசினார் :—

"வருங்கால க்ஷேமத்தை நாம் கோரும்பொழுது, உலகத்தில் நான்கு ஸ்வதந்திரங்கள் நிறுவவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். முதலாவது, உலகத்தில் எல்லாவிடத்திலும் தாராளமாகப்பேசும் உரிமை; இரண்டாவது, உலகத்திலுள்ள எந்த மதஸ்தரும் தன்னுடைய இஷ்டப்படி ஈச்வரனை ஆராதனைசெய்யும் உரிமை; மூன்றாவது, வறுமையின்மை. அதாவது, பொருளாதார முறையில் உடன்படிக்கை ஏற்பட்டு அதன்மூலம் உலகிலுள்ள ஒவ்வொரு தேசமும் சுகாதார முறையிலும், சமாதான முறையிலும் தன்னுடைய வாழ் நாளைக்கழிப்பது. நான்காவது, நிர்ப்பயமாய் வசிப்பது. அதாவது, உலகம் பூராவும் தன்னுடைய அயல் தேசத்தாருடன் அக்கிரமமாக யுத்தம் செய்யமுடியாதபடி ஒரு தேசத்தின் ஆயுத பலத்தைக் குறைத்துவிடுவது. இந்தத் தோற்றமானது வெகு காலத்துக்குப் பின் ஏற்படக்கூடியதென்று நினைக்கவேண்டாம். நாம் உயிருடனிருக்கும்பொழுதே நம்முடைய தலைமுறையிலேயே நாம் அடையப்போகும் உலக அமைப்புக்கு இந்த ஸ்வதந்திரங்கள் அடிப்படையானவை. வெடி குண்டுகளின் பலத்தினால் யதேச்சாதிகாரிகள் ஸ்தாபித்து விடுவதாகச் சொல்லும் கொடுங்கோல் ஆக்ஷியுள்ள புதிய அமைப்புக்கு நம்முடைய உலக அமைப்பு எதிர்முறையானது".

1942-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 10-ம் தேதி ஜெனராலிஸிமோ சியாங்-கே-ஷேக் பின்வருமாறு சுங்கிங்கில் பேசினார் :—"இந்த யுத்தத்தில் நாமும், நமது நேசதேசங்களும், மனிதவர்க்கத்தினுடையவும், நாகரீகத்தினுடையவும், ஸ்வதந்திரத்திற்கும் ரக்ஷணைக்கும்தான் பாடுபடுகிறோம். ஒரு தேசம் அல்லது நாட்டின் சுயநலத்தை நாங்கள் கருதவில்லை. உயர்வான ஜாதியாரின் கொடுங்கோல் ஆக்ஷிமுறைகளை மற்ற தேசங்களில் பரவச்செய்யவேண்டுமென்ற அச்சு நாடுகளின் எண்ணங்களுக்கு மாறாக எல்லா ஜாதியாரும் தனிப்பட்டமுறையில் வாழ வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம்".

ஐக்கிய நாட்டுக் கப்பல்களின் நிலை.

ஜூன் மாதம் 2-ம்தேதி பிரிடிஷ் கடற்படை இலாகாவின் தலைவரான மிஸ்டர் ஏ. வி. அலெக்ஸாண்டர் காமன்ஸ் சபையில் சில தைரியந்தரத்தக்க விஷயங்களைச் சொன்னார். அந்தச் செய்தியின் தாத்பரியம் பின் சொல்லப்படுவதாகும்.

(1) 1943-ம் வருஷம் மே மாதத்தில் மூழ்கடிக்கப்பட்ட எதிரிகளின் யூ படகுகள் அவர்கள் அவ்வப்போது உற்பத்தி செய்வதைவிட அதிகமானதாகவேயிருந்தது.

(2) 1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ம் தேதியுடன் முடிவடைந்த 6 மாதங்களில் மூழ்கடிக்கப்பட்ட ஒவ்வொரு 4 யூ படகுகளுக்கும் மேலாக 1943-ம் வருஷம் மே மாதம் 31-ம் தேதியோடு முடிவடைகிற ஆறு மாதங்களில் 5 யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

(3) சென்ற 12 மாதங்களில் நாசமாக்கப்பட்ட யூ படகுகளின் எண்ணிக்கை முந்திய 33 மாதங்களில் மூழ்கடிக்கப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கிறது.

(4) 1943-ம் வருஷத்தின் முதல் ஐந்து மாதங்களில் ஒவ்வொரு மாதங்களிலும், 1942-ம் வருஷத்தில் அதே மாதங்களில் ஏற்பட்டதைவிட வியாபாரக் கப்பல்களின் நஷ்டம் மிகவும் குறைந்துகொண்டேவருகிறது.

(5) அட்லாண்டிக் சண்டையிலே ஏற்பட்டிருக்கும் வெற்றிதரத்தக்க மாறுதல்கள், நேசநாட்டின் துணைப்படைகளின் அபிவிருத்தியையும், புதிது புதிதான தளவாடங்கள் உற்பத்தி அதிகரித்திருப்பதையும், புது வழிகளை அதிகமாய் அனுசரிப்பதையும் தெளிவாய்க் காட்டுகின்றது.

(6) பிரிடிஷ்-அமெரிக்க விமானங்களினால் எதிரியின் யூ படகு தளங்களும், உற்பத்தி சாலைகளும் குண்டுகளால் தாக்கப்பட்டதினால் எதிரியின் யூ படகுகள் இப்பொழுது முன்னைவிட குறைந்தேதான் கடலில் வேலை செய்கின்றன.

(7) "நாம் நமக்கு ஏற்படவிருக்கும் கஷ்ட நஷ்டங்களை எதிர்த்து நிற்கத் தயாராயிருக்கவேண்டும்! எதிரிகள் இப்பொழுது தங்களுக்குப் பாதகமாய் இருக்கும் நிலைமையை மாற்றப் பிரயத்தனப்படுவார்கள் என்பது நிச்சயம்".

மே மாதம் 19-ம் தேதி வாஷிங்டனிலுள்ள அமெரிக்க சபையில் பேசியபொழுது மிஸ்ட்டர் சர்ச்சில், அமெரிக்கத் தளங்களில் சென்ற 6 மாதங்களாகக் கட்டப்படும் கப்பல் களின் எண்ணிக்கை அந்த சமயத்தில் நேசக் கட்சியினரான பிரிடன், அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் இழந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கையைவிட அதிகமானதே. இப் பொழுது இன்னும் அதிகமாகவே கப்பல்கள் கட்டப்படுகின்றன. இம்முயற்சிகள் குறையா திருப்பின் நிற்காதுஅதிகமான எண்ணிக்கையாய் கப்பல்கள் செய்யப்பட்டு யுத்தத்தில் வேலே செய்யும் நேசக்கட்சியின் கப்பற்படையில் சேர்க்கப்படும் என்பது நிச்சயம் என்று கூறினர். மே மாதம் 28-ம் தேதி போர்ட்ஸ்மத்திலே நடத்திய பேச்சில் மிஸ்ட்டர் ஈடன் "அட்லாண்டிக் சண்டையைப்பற்றி வரும் விஷயங்கள் ஊக்கமளிக்கின்றன. வியா பாரக்கப்பல்கள் நம்மால் மிகவும் அதிகமாய்க் கட்டப்படுகின்றன. அவைகளுக்கு ஏற்படும் நஷ்டங்கள் குறைந்துகொண்டே வருகின்றன. எதிரியின் யூ படகுகள் இன்னும் அதிகமான எண்ணிக்கையில் நாசமாக்கப்படுகின்றன. யூ படகு சண்டை இன்னும் நடந்துகொண்டுதா னிருக்கிறது. இன்னும் ஒன்றும் நிச்சயமாய் முடிவு ஏற்படவில்லை. ஆனல் நாம் முன்னை விட இப்பொழுது பயமின்றி இருக்கிறோம்" என்று சொன்னர்.

ஹிட்லர் வீண் ஜம்பம் அடித்துக்கொள்ளுகிறன்.

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ம் தேதி அடால்ப் ஹிட்லர் "தமது ஸப்மரீன்கள் ஒவ்வொரு மாதத்திலும் செய்யும் வேலையானது மாதா மாதம் அதிகமாகிக்கொண்டே வரும்" என்றே கூறினன். ஜெர்மன் யூ படகுகள்தான் பிரிடனை அழிப்பதற்கு உபயோகமான "முக்கியமான ஆயுதம்" என்றும் சொன்னன். ஹிட்லர் பேசியதற்கு முந்திய 1942-ம் வருஷத்தில் முதல் நான்கு மாதங்களில் பெர்லின் ரேடியோ சராசரி 5,54,325 டன் நிறை யுள்ள கப்பல்கள் அழிக்கப்பட்டதாய்க் கூறிற்று. மற்றைய 8 மாதங்களில் 8,55,785 மொத்தமான டன் நிறையுள்ள கப்பல்கள் அழிக்கப்பட்டன. 1943-ம் வருஷத்தில் முதல் 5 மாதங்களில் 5,75,720 டன் நிறையுள்ள கப்பல்கள்தான் ஜெர்மன் யூ படகுகள் அழித்திருக் கின்றன. இதனின்றும் ஜெர்மனியின் "முக்கிய ஆயுதத்தின்" கூர் மழுங்கிவிட்டது என்று தெரிகிறது.

1941, 1942, 1943 இந்த வருஷங்களில் ஏப்ரல், மே மாதங்களில் அழித்ததாக பெர்லின் ரேடியோ கூறும் நஷ்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தாலே மிகவும் உற்சாகமாக இருக்கிறது.

	1941	1942	1933
ஏப்ரல் ...	10,00,000 டன்கள்.	5,85,000 டன்கள்.	4,23,000 டன்கள்.
மே ...	8,61,460 ,,	9,24,000 ,,	4,30,000 ,,
மொத்தம் ...	1,861,461 டன்கள்.	1,509,000 டன்கள்.	8,53,000 டன்கள்.

1942-ம் வருஷம் ஏப்ரல், மே மாதங்களில் 7,84,440 டன்கள் நிறையுள்ள கப்பல் கட்டிய அமெரிக்கக் கப்பற்கட்டும் தளங்கள் இவ்வருஷம் அதே மாதங்களில் 24,13,600 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் கட்டியிருப்பது இன்னும் ஊக்கமளிக்கிறது.

அதாவது பெர்லின் ரேடியோவின் கூற்று 100-க்கு 45-வீதம் குறைந்தும், அமெரிக் காவின் உற்பத்தி 100-க்கு 222 வீதம் அதிகரித்தும் இருக்கிறது. ஒரு வருஷத்திற்கு முன்பு அமெரிக்க உற்பத்தியைவிட பெர்லினல் அழிக்கப்பட்டதாய்க் கூறப்பட்டது 100-க்கு 102-ஆக இருந்தது. ஆனல் இன்று அமெரிக்க உற்பத்தி பெர்லினல் அழிக்கப்பட்டதாகக் கூறுவதைவிட 100-க்கு 183-ஆக மாறியிருக்கிறது.

பழங்கதை.

சிறிது காலத்திற்கு முன்வரை, ஜெர்மன் யூ படகுகள் ஜயிக்கப்படமுடியாத படை என்றும், முடிவாக வெற்றி கிடைக்கும்வரை மாதத்திற்கு மாதம் அதிகமான வெற்றியையே பெற்றுக்கொண்டுவரும் என்றும் பெர்லின் ரேடியோ கூறிவந்தது. பின்வரும் ரேடியோப் பேச்சுக்கள் அவ்வாறு கூறப்பட்டவைகளின் சான்றுகளாகும்.

1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ம் தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது).—

"துணைக்காவலோடுகூடிய கப்பற்கூட்டங்களை எதிர்த்துச் சண்டை செய்வதில், ஜெர்மனியின் எதிர்ப்புகள் வடக்கிலே எப்போதும்போல் மிகவும் பலமாகவே இருந்துகொண்டு தானிருக்கிறது. எவ்விதகால மாறுதலாலும் வேறு எக்காரணத்தாலும் அது மாறவேயில்லை."

1942 நவம்பர் 22-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஹிந்துஸ்தானியில் சொல்லப்பட்டது).—

"அச்சுநாடு ஸப்மரீன்கள் உலகிலுள்ள எல்லா சமுத்திரங்களிலும் ஜயத்துடன் தாக்கி வருகின்றன. ஒவ்வொரு நிமிஷமும் நேசக்கப்பல்களை அழித்துக்கொண்டும் இருக்கின்றன. பிரிடிஷ்காரர்களும், அமெரிக்கர்களும் இந்நஷ்டத்தோடு நீண்டநாள் சண்டைசெய்ய முடியாது."

1942-ம்வூ டிஸம்பர்மீ 30-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஹிந்துஸ்தானியில் சொல்லப் பட்டது).—

"கெட்டகால நிலையிலும், யூ படகுகள், நவம்பர் மாதத்தில் பெரும் வெற்றிகளை அடைந்தும், இம்மாதத்தில் மிகவும் அதிகமான நடவடிக்கைகளை நடத்தியும் இருக்கின்றன."

1943-ம்வூ ஜனவரிமீ 1-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது).

"மாதத்திற்கு மாதம் ஜெர்மன் யூ படகுகள் மிகவும் பயங்கரமான படையாக மாறிக் கொண்டிருக்கின்றன. இறுதியில் வெற்றியடையும்வரை ஜெர்மன யூ படகுகள் பின்வாங்க மாட்டா என்பது திண்ணம்."

1943-ம்வூ ஜனவரிமீ 13-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப் பட்டது).—

"யூ படகுகளை எதிர்க்க இன்னும் புதுவழிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நேரான எதிர்ப்பு முறைகளையோ, அல்லது புது கப்பல்களோ கட்டப்பட்டு வேண்டிய முடிவை அடையவில்லை."

1943-ம்வூ பிப்ரவரிமீ 6-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப் பட்டது).—

"யூ படகுகள் இன்னும் அதிகமான ஜயத்தையே அடைகின்றன. வரும் மாதங்களில், முக்கியமாய் பிப்ரவரிக்கப்புறம் மூழ்கடிக்கும் நிறைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிக் கொண்டேயிருக்கும்."

1943-ம்வூ பிப்ரவரிமீ 6-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப் பட்டது).—

"பிரிடிஷ் சாம்ராஜ்யம் ஸப்மரீன்களினால் அழிக்கப்படும் நாள் நெருங்கி விட்டது. நேசக்கட்சியின் கப்பல் நஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது."

மாறுதலான குரல்.

ஆனால் சில வாரங்களாக, அவர்களின் குரல் பெரும் மாறுதலடைந்திருக்கிறது. ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட சிறிய நஷ்டங்களுக்கு "காரணம் சொல்லியாகவேண்டும்." மே மாதம் 2-ம்தேதி ஏப்ரலில் மார்ச்சைவிட குறைவாக நேசநாட்டு கப்பல்கள் நாசமாக்கப்பட்டதானது, அவர்கள் கடலில் குறைந்த எண்ணிக்கையான கப்பல்களை விடுத்ததேதான். ஏ. வி. அலெக்ஸாண்டர் மேலே சொல்லியதை பிரிட்டனில் ஏப்ரல் மாதத்தில் தான் முந்திய 15 மாதங்களைவிட அதிகமாக இறக்குமதிகள் செய்யப்பட்டிருக்கிறது என்று தலையிலடித்துக்கூறுகிறார். இன்னும்பல தற்போதைய வாக்குமூலங்கள் கீழே வருபவை.

1943-ம்வூ மேமீ 6-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது).—

(ஜெர்மன் உதவு அட்மிரல் லட்செறில் பேசியதை இங்கு குறிக்கப்பட்டிருக்கிறது.) "ஒருமாத நடவடிக்கைகள் நடத்தியபின் நமது யூ-படகுகள் சிறிதுகாலம் சிரமப்பரிகாரம் செய்வதற்கு அவைகள் தளங்களுக்கே திரும்பிவிட்டன. அப்பொழுது மேற்படி படகுகளின் நடவடிக்கை அதிகமாயில்லை. எதிரிகள் ஸப்மரீன்களுக்கு எதிரியாய்த் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்துபார்த்துவிட்டனர்.";

(1943-ம் மேமாதம் 31-ம்தேதி பெர்லின் ரேடியோவில் ஜெர்மன் பாஷையில் பேசப்பட்டது).

(ஒயில்கிஷர் பியோபாஸ்டர் கூறியதை குறிக்கப்பட்டிருக்கிறது). "குறைச்சலான கப்பல்கள் மூழ்கடித்தபோதும் எதிரிகள் இடைவிடாது சண்டைசெய்யச் செய்தது. மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை மாறுபட்டாலும் யூ-படகுகளின் சண்டை அதிகமாக நடந்துகொண்டுதானிருக்கிறது."

1943 ஜூன்மாதம் 1-ம்தேதி (பெர்லின் ரேடியோவில் ஆங்கிலத்தில் பேசப்பட்டது).—

("உண்மைகளும், கட்டுகதைகளும்" என்ற தலைப்பின்கீழ் பேசிய பேச்சில்), "எதிரிகளின் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதின் நிறை குறைந்துவருவதை யாரும் மறுதளிக்கமுடி

யாது. ஒவ்வொரு சமயமும் எதிர்ப்பு முறைகள் பலப்படுத்தப்படுகின்றன. இதனால் யூ-படகு களின் வெற்றி குறைந்துவிட்டது.

ஜூன்மாதம் முதல் தேதியில் பேசிய இந்தப் பேச்சானது, 38-வருஷங்களுக்குமுன் நடந்த ருஷ்ய ஜப்பான் யுத்தத்தில் இந்தத் தேதியில் ஜப்பானியர்களின் கப்பல்கள் ருஷ்யக் கப்பற்கூட்டத்தை ஜயித்ததையும் சேர்த்துப் பேசப்பட்டதானது, பழைய விஷயங்களை ஞாபகப்படுத்தியதுதான்.

சாராம்சம்.

யூ-படகுகளை எதிர்த்து சண்டையிடுவதில் தைரியந்தரத்தக்க விஷயங்களே நமக்குக் கிடைக்கிறது என்று நம் நேசநாட்டுத்தலைவர்கள் கூறுவதை பெர்லின் ரேடியோவில் பேசப்படும் பேச்சுக்களே உறுதியாக்குகின்றன. ஆனால் வரும் மாதங்களில் யூ-படகுகள் இன்னும் அதிகமாய் வேலை செய்யலாம். அவ்வாறு ஏற்படாதென்று முற்கூட்டியே சொல்வதானது பயன்தரத்தக்கதில்லை. ஆகவேதான் நேசநாட்டுத்தலைவர்கள் அவ்வாறு கூறவில்லை. வரும்கால நடப்பு எப்படியிருப்பினும் சென்ற சிலமாதங்களில் நடந்தநடப்பிலே யூ-படகுகளின் வேலை குறைந்துவிட்டபடியால் நம் நேசநாட்டு வியாபாரக் கப்பல்கள் அதிகமாய்உற்பத்தி செய்யப்பட்டிருப்பது அதிகமாகவே இருக்கிறது. சென்ற ஆறுமாதங்களாக அமெரிக்கக் கப்பற்கட்டும் தளங்கள்மட்டும் ஜெர்மானியர்கள் பொய்யாகக்கூறுகின்ற அளவு கப்பல்களுக்குமேல் கட்டிவிட்டன. அதேசமயத்தில் ஐக்கியதேசத்தின் வியாபாரக் கப்பற்கூட் டத்தில் மொத்தத்தில் 2, 311, 720 டன் நிறையுள்ள 285 கப்பல்கள் சேர்க்கப்பட்டிருக்கின் றன. பிரிடனிலும், கனடாவிலும் கட்டப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கையை சிந்திக்குங்கால் இன்றையத்தினம் ஐக்கியதேசங்கள் சென்ற 6-மாதங்களுக்குமுன்னைவிட 35-லக்ஷம் டன்கள் மொத்த நிறையுள்ள கப்பல்களைக் கட்டியிருக்கின்றன. நமது தாக்குதல்களையெல்லாம் யூ-படகுகள் இதுகாறும் எதிரி எதிர்க்கமுடியாததால் நம் கப்பற்கூட்டத்தின் எண்ணிக்கை அதிகமாவதை தடுக்கமுடியவில்லை.

எதிரி நடமாடும் சமுத்திரங்களில் சுரங்கவெடி பாவுதல்.

(பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்தில் இந்தச்செய்தி அடிக்கடி வெளியிடப்படுகின்றது.)

ஆகாயத்திலிருந்து சுரங்கவெடிகளைப் பாவுவது பிரிடிஷ் விமானப்படையின் சிற்றுண்டி யென்று நீங்கள் நினைத்திருக்கலாம். ஆகிலும் இந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு தைரியமும், திடமும், ஊக்கமும் அவசியமென்று ஒரு ஒலிபரப்பில் கார்ல் ஓலாஸன் பிரசங்கம் செய்து இருக்கிறார்.

நேற்றிரவு பாம்பர் படையைச் சேர்ந்த விமானங்கள் இரவில் எதிரியின் சமுத்திரங் களில் சுரங்கவெடிகளைப் போட்டன. பிரிடிஷ் விமானப்படையின் பிரசுரங்கள் இந்த நடவடிக்கையைச் சுருக்கமாக இவ்விதம் சொல்லிவிடுகிறார்கள். இதை நடத்துவதில் சிறந்த முறையில் ஏற்பட்டதிட்டம், அபாயகரமான நிலைமையில் பிரிடிஷ் விமானிகள் விமானம் ஓட்டும் சாதுர்யம் இவைகளைப்பற்றி ஒரு புராணம் சொல்லலாம். இந்த விமான நடவடிக்கை யுத்தம் ஆரம்பித்தபொழுது துவங்கியது. எதிரியைத் தாக்குவதற்கு ரகசியமான உப யோகமுள்ள சாதனமும் இதுதான்.

ஜெர்மன் நகரங்களைத் தாக்குவது அதிருஷ்டவசமென்றும், கஷ்டமானதென்றும் புலப் படும் இரவுகளில் நமது ஸ்டர்லிங்க், லங்காஸ்டர், வெல்லிங்டன் விமானங்கள் ஏராளமான சுரங்க வெடிகளை ஏற்றிச்சென்று ஜெர்மனியின் போக்குவரவு, கடல் மார்க்கங்களில் அவை களைத் தள்ளிவிடுகின்றன. நார்வே முதல் பிரான்ஸை ஒட்டியிருக்கும் அட்லாண்டிக் கடற் கரையிலுள்ள கால்வாய்கள், நதிமார்க்கங்கள், பால்டிக் கடல், காட்டிகாட், கியல் கால்வாய், மத்திய தரைக்கடலிலுள்ள அச்சுநாடுகள் நடமாடும் பிரதேசங்கள் இன்னும் நமது கப்பற் படை சாவதானமாகச்சென்று போடமுடியாத ஸ்தலங்கள் எல்லாவற்றிலும் சுரங்கவெடி கள் பாவப்படுகின்றன, ஆகாயத்திலிருந்து சுரங்கவெடிகளைப் பாவுதல் இரண்டு இலாகாக் களுக்கு முள்ள ஒத்துழைப்பு முறையை விளக்கிக் காட்டுகிறது. எங்கே எப்பொழுது, எவ்வகைப்பட்ட சுரங்கவெடிகளைப் பாவவேண்டுமென்று பிரிடிஷ் கடற்படை நிச்சயம் செய்து விடுகிறது. விமானப்படை இந்த வேலையைப் பூர்த்திசெய்து விடுகிறது.

இந்த ரகசிய நடவடிக்கையின் பரிமாணம்.

இந்த ரகசியமான நடவடிக்கையின் பரிமாணத்தைப்பற்றி பிரிடிஷ் விமானப்படையும் கடற்படை இலாகாவும் சேர்ந்து வெளியிடும் ஒரு பிரசுரத்தில் விவரங்கள் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. சென்ற ஸெப்டம்பர் மாதம் முடிய அதாவது 15 மாதங்களுக்குள்ளாக சுரங்க வெடி பாவும் விமானங்கள் 3 மிலியன் மைல்கள் பறந்து சென்றன. யுத்த ஆரம்பம் முதல்

பாவப்பட்ட சுரங்கவெடிகளின் சங்கியை மிலியன்கள் கணக்கானவை. சென்ற யுத்தம் பூராவிலும் நமது கடற்படை 1,28,652 சுரங்க வெடிகளைத்தான் பரவியிருக்கிறது.

சிரம சாத்யமாயும் அபாயகரமானதுமான இந்த நடவடிக்கைகளின் விளைவுகளைச் சரியானபடி மதிக்கமுடியாது. எதிரி தன்னுடைய நஷ்ட விவரங்களை வெளியிடுவதில்லை. ஆகிலும் ஒன்றுபட்ட அறிக்கை இலாகாக்களின் மதிப்புப்படி சுரங்கவெடிகளால் மூழ்கி விட்ட ஒவ்வொரு கப்பலுடன் நமக்குப் புலப்படாத மற்றொரு கப்பலும் நாசமாகி இருக்க வேண்டும்.

நம்முடைய முயற்சிகளுக்குக் கப்பல்கள் மூழ்குவதுதான் முக்கிய பலனாகும். ஆகிலும் சுரங்கவெடி பாவுவதிலிருந்து நம்முடைய யுத்த தந்திரத்துக்கு அனுகூலமான சில விளைவு களும் ஏற்படும்.

ருஷ்யாவிலும், ஐரோப்பாவிலும், டான்நதி முதல் அட்லாண்டிக் கடல் வரையிலும் நார்வேயிலிருந்து மத்தியதரைக்கடல் வரையிலும், ஹிட்லரின் துருப்புகள் பரவியிருப்பதால் அவனுடைய ஸப்ளைகளும், போக்குவாவு பிரச்னைகளும் அதிகரித்துவிட்டன. பாம்பர் படைகளும் சண்டை விமானப்படையும் ஜெர்மனி, பிரான்ஸ் தேசங்களிலுள்ள இருப்புப் பாதைகளை இடைவிடாது நொருக்கி வருவதால், ஜெர்மனியின் ஸப்ளைப் போக்குவரவுகள் கடற்கரையோரமாக சமுத்திரமார்க்கமாக நடைபெற வேண்டியிருக்கிறது.

நாம் இந்த கடல் மார்க்கங்களில் சுரங்கவெடிகளைப் பாவிவிட்டால் எதிரியின் போக்கு வரத்துகள் தாமதமடைந்து சீர்கெட்டுவிடுவதோடு யுத்த முயற்சிகளும் பாதிக்கப்படுகின்றன.

சுரங்கவெடி பாவுவதிலிருந்து ஜெர்மனியின் கடல் மார்க்க போக்குவரவு வேறு பக்கங் களுக்கு மாற்றப்படுகிறது. இங்கேயும் அவைகள் வேறு விதமான தாக்குதல்களுக்கு உட்படவேண்டியிருக்கின்றன. கடைசியாக நூற்றுக்கணக்கான மைல்களுள்ள கடல் மார்க் கங்களிலிருந்து சுரங்கவெடிகளை அப்புறப்படுத்துவதற்காக எதிரி ஏராளமான மனிதர்களையும் சுரங்கவாரிக் கப்பல்களையும் உபயோகிக்கவேண்டியதாகயிருக்கிறது. சுரங்கவெடிகளை அகற்றுவதற்குத் தேர்ச்சிபெற்றவர்களைத்தான் அவன் அனுப்பவேண்டும். முடவர்களையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சுரங்கவெடிகளகற்றும் வேலைக்கு அனுப்பமுடியாது.

விமானங்களிலிருந்து சுரங்கவெடிகள் குடைகளின் சாதனத்துடன் கீழே விழுகின்றன. இவ்விதம் செய்யாவிடில் தண்ணீரில் விழும்பொழுது அதிர்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் சுரங்கவெடிகளின் யந்திர அமைப்பு கெடுதலடைந்துவிடும். நடவடிக்கைக்குத் தகுந்தபடி சுரங்கவெடிகளும் பலரகங்களுள்ளவை. சுரங்கவெடிகளைத் தயாரிக்கும் நம்முடைய சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களுக்கும் சுரங்கவெடிகளை அகற்றும் ஜெர்மன் படைகளுக்கும் ஆராய்ச்சி முறையில் போர் நடைபெற்று வருகிறது.

மிகவும் கஷ்டமான வேலை.

விமானி, விமானத்திலுள்ள மற்ற வேலைக்காரர்கள் சுரங்கவெடிகளைப் பாவும் வேலையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள். முதலாவது மிகவும் கஷ்டப்பட்டு பறந்து செல்வதுடன் விமானம் ஓட்டுவதற்கும் அதிக சாமர்த்தியம் வேண்டும். எதிரியின் சமுத்திர மார்க்கங்களில் எவ்விதமாவது சுரங்கவெடிகளைப் பாவுவது என்பது உபயோகமில்லை. எதிரி உபயோகித்து வரும் கடல்மார்க்கங்களை அறிந்து கடற்படை இலாகா சுட்டிக்காட்டும் குறிப்பிட்ட இடங் களில்தான் சுரங்க வெடிகளைப்போடவேண்டும். வெடிகுண்டு வீசப்படும் லக்ஷியங்களை அறிவதற்குள்ள அடையாளங்களில்லாத சமுத்திர மார்க்கங்களில் இருட்டில் சுரங்கவெடி போடும் ஸ்தலங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். கீழாகப் பறந்து செல்லவேண்டும், விமானி தன்னுடைய சாமீப்யத்தை கூடுமான வரையில் மறைத்துக்கொள்ளவேண்டும். இஞ்சின்கள் அதிக சப்தம் செய்யாமலும் செல்லவேண்டும். கடலில் ரோந்து பார்க்கும் விமானங்களும் கடற்கரையிலிருக்கும் விமானங்களும் சுரங்கவாரிகளுக்கு இவைகளின் சாமீப்யத்தை எச்சரிக்கை செய்துவிடும். கீல் கால்வாய்போன்ற பலமான தற்காப்புகளுள்ள எதிரியின் பிரதேசங்களுக்குள் கீழாகப் பாய்ந்து செல்லுவதற்கு அதிக மனோதைரியமும், திடசித்த மும், ஊக்கமும் அவசியம்.

வெடிவிமான ஓட்டியின் அபிப்பிராயத்தை ஒட்டி கவனித்தால் சுரங்க வெடிகள் பாவும் வேலையானது, ஸ்வாரஸ்யமில்லாதது, கஷ்டமானது, நேத்திரானந்தமும், ஆத்ம சந்தோஷமுமில்லாதது. தரையிலுள்ள லக்ஷியத்தை அடிக்கும்பொழுது, பலமான எதிர்ப்பு இருந்தபோதிலும், தன்னுடைய வெடிகுண்டுகள் லக்ஷியத்தின் பேரில் குறிப்பாக விழுவதை விமானி கண்ணுற்றுப் பார்க்கலாம். தீப்பற்றிக்கொள்வதையும் அவனே ஏமாற்று வதற்கும் துரத்தியடிப்பதற்கும் எதிரி செய்யும் பிரயத்னங்களையும் இவன் நேரில் பார்க்க லாம். சுரங்கவெடி பாவும் வேலையில் இவைகளைக் காணமுடியாது. இருளில் இலக்கைக்

கண்டுபிடித்த உடன் விமானி ஒரு பொத்தானை அமுக்கின உடனே அல்லது ஒரு லீவரை இழுத்த உடனே சுரங்கவெடி விழுந்து தண்ணீருக்குள் நழுவி விடுகிறது. ஒரு சப்தமும் கேட்கிறதில்லை. ஒரு விதமான தீஜ்வாலையும் கிளம்புவதுமில்லை. அவன் போட்ட சுரங்க வெடி ஏதாவது உபயோகப்படுமா இல்லையா என்றும் அவனுக்குத் தெரியாது.

ஆகாயத்திலிருந்து சுரங்கவெடி பாவுவதென்பது எதிரியின் திருஷ்டிக்குப்படாத ஒரு போர்முனையை அமைப்பதாகும். இந்த அபாயமுள்ள, பிரதிப் பிரயோஜனமற்ற, ரகசியமாக நடைபெறும் இந்த நடவடிக்கையில் எல்லாப் போர்முனைகளையும்விட எது சிறந்தபோர்முனை ஏற்படுகிறது என்பதில் நாம் திருப்தியடைய வேண்டும்.

மத்தியக் கிழக்கில் இந்தியத் துருப்புகள்.

தீரச் செயலுக்குப் பாராட்டு.

“யுத்தத்தில் நான்காம் இந்தியப்படை, ஐந்தாம் இந்தியப்படை, மூன்றும் இந்திய மோட்டார்படை ஆகிய பல இந்தியப்படைகளின் வேலை மிகவும் போற்றத்தக்கதாக இருக்கிறது. அதற்காக இந்தியா, இந்த சாம்ராஜ்யம், ஐக்கிய நாடுகள் எல்லாம் நன்றியுடையனவாயிருக்க வேண்டும்” என்று ஜெனரல் ஸர் ஆலன் ஹார்ட்லி என்ற இந்திய உதவி தளகர்த்தர் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதி அரசாங்க சபையில் கூறினர்.

அதிலிருந்து டுனிஸியாவிலே புதிது புதிதாக போற்றத்தக்க பல வெற்றிகளை இந்தியத் துருப்புகள் அடைந்து வருகின்றனர். ஏப்ரல் 8-ம் தேதியன்று பீல்டு மார்ஷல் வேவலுக்கு அனுப்பிய தகவலில் ஜெனரல் அலெக்ஸாண்டர் நான்காம் இந்தியப்படை மாரத் அரணைத் தாக்கியபொழுது “அடையாளம் உண்டாக்கிய கொரேமானதும் தீரமானதுமான பல தாக்குதல்களை” செய்தனர் என்பதற்கு சாக்ஷியாயிருக்கிறார். இந்த இந்தியப்படையினால் புரியப்பட்ட தீரச்செயல்களை உலகம் பூராவும் போற்றுகின்றனர். மேன்மை தங்கிய வைஸ்ராய் பிரபுவிற்கு அனுப்பிய செய்தியில் Mr. சர்ச்சில் “மாரத்தில் நடந்த யுத்தத்திலும், வாடி அக்காரித்தில் வெற்றியடைந்தபோதும், இந்த நான்காம் இந்தியப்படையின் தீரமான செயல்களை நாங்கள் பெருமையோடு கவனித்தோம். மத்தியக்கிழக்கிலே நடந்த எல்லாப்போர்களிலும் இந்தியப் படைகள் புரிந்த தீரச்செயல்கள் இந்தியத் துருப்புகளுடையவும், வீரமான கூர்க்கத் துருப்புகளுடையவும் பெருமையையும் வீரத்தையும் அதிகப்படுத்துகின்றன. இந்தியத் துருப்புகளும் சேர்ந்து நடந்த இந்தக் கஷ்டமான யுத்தத்தில் கிடைத்த வெற்றியில் இந்தியச் சண்டை செய்யும் வீரர்களுக்கும் பங்கு உண்டு என்பதுபற்றி நாம் பெருமை அடைகிறோம்.”

இரிட்டிரியாவிலிருந்து டுனிஸியா வரை.

மத்தியக்கிழக்கிலே பல பல யுத்த அரங்கங்களிலேயும் சென்ற மூன்று வருஷங்களாக இந்தியத் துருப்புகள் பெருமை யடைந்திருக்கின்றனர். இதாலிய இரிட்ரியா, பிரிடிஷ் ஸோமாலிலாந்து, அபிஸீனியா, ஸிரியா, லிபியா, எகிப்து ஆகிய இவ்விடங்களில் அவர்கள் புரிந்த வீரச்செயல்கள் இந்தியாவின் ராணுவ வீரத்தை வெளிப்படையாய்க் காண்பிக்கின்றன. கெரன், கிஸ்ஸோன், மெஸ்ஸி, ஸிடிபராணி, லிபியன் ஓமார், ஆங்கிலா, ஜேலோ, பிர்ஹாகிம், பெங்காஸி, மாரத், வாடி அக்காரித், டுனிஸ் ஆகிய இடங்களின் பெயர்களே இந்தியத் துருப்புகளின் வீரச் செயல்களுக்கு போதிய சான்றாக இருக்கின்றன.

ஐந்தாம் இந்தியப்படை, இத்தேசத்தின் மற்றைய படைகளோடு இதாலிய இரிட்ரியாவை ஜயிப்பதற்கு முக்கியமான வேலை செய்திருக்கிறது. கெரன்மலையின் உச்சியை பிடித்த பொழுது செய்த அவர்களின் வீரச்செயல்கள் பெருமையோடு குறிக்கப்பட்டுள்ளன. இரிட்ரியாவின் மலைச்சாரல்களில் புரிந்த அவர்கள் வீரச்செயல்கள் பல, துரதிர்ஷ்டவசமாய் தெரிந்துகொள்ள முடியவில்லை. கிஸ்ஸோனில் இந்தியத் துருப்புகள் செய்த தீரச்செயல்களும், மெஸ்ஸியை தற்காத்துக்கொண்டதும், நாம் ஸிரியாவின் யுத்தத்தில் வெற்றியடைந்ததற்கு மிகவும் உதவியாயிருந்தன.

பிரக்யாதிபெற்ற “நான்காம் படை”.

1941-ம் வருஷத்தில் ஜெனரல் ஆசின் லெக் செய்த தாக்குதலில் பஞ்சாப் தேச சைனியங்கள் லிபியன் ஓமாரைப் பிடித்ததானது இங்கியர்களின் செய்கைகளில் மிகவும் பெரிய செயலாகக் கருதப்படுகிறது. துப்பாக்கி குண்டுகளுக்கிடையே புகுந்து தற்காப்புகளையெல்லாம் நாசப்படுத்தினர். ஜிராபூப்பிற்கு 200 மைல்கள் மேற்கு தென்மேற்கு (West-South-West) உள்ள லிபியா பாலைவனத்திலுள்ள செழிப்பான பிரதேசங்களான ஆங்கிலா ஜேலோ இவைகளின் தற்காப்புகளையும், நாசமாக்கி தற்காத்தவர்களையெல்லாம் சிறைப்படுத்தினர்.

டொப்ருக்கி லிருந்து ஸிரனைகாக்குள் 8-வது சேனை முன்னேறிச் சென்றபோது முன்னணியில் நம் நான்காம் இந்தியப்படைதான் இருந்தது. "இந்தியப்படைகளின் செயல்களுக்கு எந்தப் பரிசும் பெரிதல்ல" என்று ஜெனரல் ரிட்ச்சி கூறினார்.

ஏழாவது இந்திய காலாட்படை பெங்காஸியில் 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் அடைக்கப்பட்டும், "ரோமலின் இரும்புவளையம்" என்று சொல்லத்தக்கப் படைகளோடு யுத்தம் புரிந்து 200 மைல்கள் எதிரி ஆக்கிரமித்திருந்த பிரதேசங்களிலே சென்றும் 8-வது சேனையைச் சேர்ந்தது.

1942-ம் வருஷம் மே மாதம் ரோமல் தாக்குதல் ஆரம்பித்தபொழுது, இந்திய தரைப் படையொன்று மூன்றும் இந்திய மோட்டார் படையோடு சேர்ந்து பிர்ஹாக்கிற்கு கிழக்கி லிருந்த ஜெர்மானிய ஆபிரிக்க பான்ஸர்படையை எதிர்த்து தான் அழிந்து போவதற்குமுன் இப்படை 51 எதிரி டாங்கிகளை நாசப்படுத்தியது. இந்த வரலாற்றைப்பற்றி ஜெனரல் ஆசின்லெக், பீல்ட் மார்ஷல் வேவலுக்கு அனுப்பிய செய்தியில் "நமக்கு மே மாதம் 27-ம் தேதி ஏற்படவிருந்த பின்வாங்குதலைக் காப்பாற்றிய பெருஞ்செயலாகும் இது" என்று கூறினார். எல் அலமீனில் 5-ம் இந்தியக் காலாட்படை 1942, ஜூன், ஜூலை மாதங்களில் ஜெர்மனியார் நடத்திய கொடுந்தாக்குதல்களை சமாளித்து ருவிஸாத் ரிட்ஜைக் காத்தும், நேசக்கக்ஷியினர் சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் செய்த தாக்குதலில் பங்கு எடுத்துக்கொண்டும் இருக்கிறது.

ஆர்னிமை சிறைபடுத்தியது.

மாரத்திலும், வாடி அக்காரித்திலும், இந்தியத் துருப்புகள் மறுபடியும் அவர்களின் திறனைக் காண்பித்தன. டூனிஸைப் பிடிப்பதிலும் கடைசியாக சிறந்த நிகழ்ச்சியான டூனிஸியாவின் இதாலி, ஜெர்மன் படைகளின் தளகர்த்தரான வான் ஆர்னிமைப் பிடித்ததிலும் நான்காம் இந்தியப்படை மிகவும் பெரும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது. மேன்மை தங்கிய வைஸிராயிக்கு வந்த தந்தி ஒன்றில் ஜெனரல் ஈஸன் ஹோவர் "உங்கள் தீரமான இந்தியத் துருப்புகளும் ஆபிரிக்கா யுத்தத்தில் போராடியதைப்பற்றி நாங்கள் பெருமை கொள்ளுகிறோம்" என்றிருந்தது.

யுத்த அரங்கத்தில் இந்தியப் படைகள் நிகழ்த்திய தீரச் செயல்களைத் தவிர இரிட்ரியா விலிருந்து ஸைபரஸ் வரையிலுள்ள மத்தியக்கிழக்குப் பிரதேசங்களில் இந்தியப்படைகள் தற்காப்பும் செய்து வருகின்றன. பர்ஸியா, இராக் பிரதேசத்தில் தளகர்த்தரான ஜெனரல் பௌனல் வசம் உள்ள துருப்புகளில் பெரும்பான்மையோர் இந்தியர்களாகும். இந்தியர் களின் புத்திசாலித்தனத்தாலும் உழைப்பினாலும் பாரஸீக வளைகுடாவிலிருந்து ருஷ்யா விற்குச் செல்லும் சப்ளைகளுக்கு போக்குவரவு மார்க்கங்கள் விசேஷமாக நிருவப்பட்டன.

சென்ற யுத்தம்.

சென்ற யுத்தத்திலும் இந்தியத் துருப்புகள் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டன. யுத்தம் துவங்கிய ஒரு மாதத்துக்குள்ளாகவே பயிற்சிபெற்ற ஒரு படையானது பிரான்ஸுக் குச் சென்று ஒத்தாசை வரும் வரையில் நேசதேசத் துருப்புகள் வரிசையில் ஏற்பட்ட பிளவைக் காப்பாற்றினது. சென்ற யுத்தத்தில் கிழக்கு அரங்கங்களுக்கு இந்தியத் துருப்பு கள் அனுப்பப்பட்டபோது மெஸபடோமியா, கெலிபோலி, பாலஸ்தீனம் முதலிய இடங்க ளிலும் கீர்த்தி பெற்றன. சண்டை போடுகிறவர்களும், சண்டை போடாதவருமான 1,250,000 துருப்புகள் சேவைக்காக அயல் நாடுகளுக்குச்சென்று பிரான்ஸ், பெல்ஜியம், கெலிபோலி, ஸலோனிகா, பாலஸ்தீனம், எகிப்து, ஸூடான், மெஸபடோமியா, ஏடன், ஸோமாலிலாந்து, கேமரூன்ஸ், கிழக்கு ஆபிரிக்கா, வடமேற்கு பர்ஸியா, குர்டிஸ்தான், தெற்கு பாரஸீகம், காஸ்பியன் கடல், வட சைனா போன்ற பல்வேறு இடங்களில் யுத்தம் புரிந்தார்கள்.

இந்த யுத்தத்தில் இந்தியத் துருப்புகள் செய்திருக்கும் வேலையைப்பற்றி சென்ற மாதத் தில் டெய்லி டெலகிராப் என்ற பத்திரிகையில் "இந்தியத் துருப்புகள் தேர்ச்சிபெற்ற வீரர் கள் என்று கியாதிபெற்று விட்டார்கள்" என்று எழுதியிருக்கிறது. அவர்கள், நார்வேயில் சண்டையிட்டிருக்கின்றனர். பிளான்டர்ஸில் சண்டையிட்டிருக்கின்றனர். கிரீஸ், கிரீட், மலேயா, பர்மா முதலிய தேசங்களிலும் சண்டையிட்டிருக்கின்றனர். ஆபிரிக்காவிலும், மத்தியக்கிழக்கிலும் விடாது, நடந்த பெரும்போரிலே எதிரிகளை நிர்மூலப்படுத்தி ஆபிரிக்க மண்ணினின்றும் விரட்டியிருக்கின்றனர். இந்தியத் துருப்புகள் அச்சுநாட்டுப் படைகளோடு யுத்த அரங்கங்களில் எதிர்த்துப்போரிட்டும், இந்தியாவைப் பாதுகாத்ததுமான சென்ற யுத்தத்தில் செய்த தீரச் செயல்களோடு இப்பொழுது ஒரு புது தீரச் செயலையும் செய் திருக்கின்றனர். 1943-ம் வருஷம் மே 19 தேதியின் ஈவனிங் ஸ்டாண்டர்ட் என்ற லண்டன் பத்திரிகை "மனிதர்களின் தீரச் செய்கைகள் பெருமை பாராட்டப்பட்டால், இந்தியத் துருப்புகளின் தீரமே என்றும் போற்றப்படும்" என்று கூறுகிறது.

வட ஆபிரிக்கா வெற்றிகளுக்கு இந்தியா செய்த ஸப்ளைகள்.

வட ஆபிரிக்கா வெற்றிகளுக்கு இந்தியா செய்த பேருதவியைப்பற்றி இங்கு விவரிப்போம் :—

நேசதேசப் படைகளின் துருப்புகளும், யந்திர சாதனங்களும் வெற்றிக்குச் சாதகமான அமெரிக்காவின் பூர்ணமான ஒத்தாசையும் ஆபிரிக்காவுக்கு வருவதற்குமுன் இந்தியாவிலிருந்து ரயில்வே சாமான் வண்டிகள், கால்சட்டை பொத்தான்கள், மின்சார கை விளக்குகள், துருப்பேற்றிச் செல்லும் சிறிய படகுகள்போன்ற அநேக தளவாடங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பயிற்சிபெற்றுவரும் துருப்புகள் தங்குவதற்கு எஃகு குடிசைகளும் காவணங்களும், ராணுவ மோட்டார்கள் நிறுத்துவதற்கும், வைத்தியசாலை அமைப்பதற்கும், விமானம் தங்குவதற்கும் வேண்டிய கட்டடங்களையும் இந்தியா எஃகினால் தயார் செய்து அனுப்பியிருக்கிறது. இந்தச் சாமான்கள் ஆயிரக்கணக்கான ஏக்கராகொண்ட பரப்பில் அமைக்கப்படலாம்.

காய்ந்த, ஜலமில்லாத பாலைவனங்களில் ஜலவசதி ஏற்படுவதற்காக இந்திய ஒர்க்ஷாப்புகளிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள எஃகு தண்ணீர் குழாய்களையும் இந்தியா ஸப்ளை செய்திருக்கிறது.

துருப்புகள் முன்னேறிய பின், பின்னாலுள்ள இந்திய இஞ்ஜினியர்களும், பயோனியர்களும் மெர்ஸாமாட்ரூவிலிருந்து டொப்ரூக்குக்குப்போகும் இருப்புப் பாதையைப் பூர்த்தி செய்தார்கள். ஒரு சமயம் இருப்புப்பாதைக்கு வேண்டிய தளவாடங்கள் எல்லாம் இந்தியாவிலிருந்துதான் கொண்டுபோகப்பட்டன. ரயில்வே இஞ்ஜின்கள், தொடர் வண்டிகள், சாமான் வண்டிகள், அடிக்கட்டைகள், இன்னும் அநேக சாமான்களும் இந்தியாவிலிருந்து சென்றிருக்கின்றன.

அச்சு நாட்டு கடற்படையும், விமானப்படையும் கவனித்துவரும்பொழுது லிபியாவின் ஒரு முனையில் இந்த இருப்புப்பாதை அமைக்கப்பட்டதென்பது பிரிடிஷ் கடற்படை, விமானப்படை இவைகளின் தீரத்தை வெளிப்படுத்துகிறது.

மேலும், ரயில்வே அடிக்கட்டைகள், சாமான் இறங்குமிடங்கள், லாரிகள், மோட்டார் வண்டிகள், சாமான்வைப்பு ஸ்தலங்கள், வெடி மருந்து வைக்கும் பெட்டிகள், தந்தி மரங்கள், மற்ற அநேக வகைப்பட்ட காரியங்களுக்காக தேக்கு மரங்களும் இந்தியாவிலிருந்துதான் அனுப்பப்பட்டன. மத்தியக்கிழக்கில் அவசியமான சாமான்கள் எல்லாவற்றையும் இந்தியாதான் அனுப்பியதென்றும் சொல்லப்படுகிறது.

இந்தியாவிலிருந்து சிறிய சண்டைப் படகுகள்.

இந்தியாவின் கப்பல் தளங்களிலிருந்து தானாகச் செல்லும் சிறிய படகுகள் கட்டி அனுப்பப்பட்டன. வட ஆபிரிக்கா கரையோரமாக நமது துருப்புகளுக்கு ஆகாரங்களை எடுத்துச் செல்லவும் எதிரி ஆக்கிரமித்திருக்கும் கிராமங்களைத் தாக்குவதற்கும் இப்படகுகள் உபயோகப்பட்டன.

கடல்தாண்டிப் போர்புரிந்துவரும் துருப்புகளுக்கு வேண்டிய சாமான்களை அனுப்புவதற்காக இந்திய முதலாளிகள் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி எவ்வளவு உற்பத்தி செய்துவருகிறார்களென்பதைப்பற்றி விவரித்து எழுதலாம். புதிய உற்பத்திகள் பின்வருமாறு :—பலவகைப்பட்ட மின்சார தந்திக்கம்பிகள், மின்சார விசிறிகள், தண்ணீர் கவாடங்கள், தண்ணீர் குழாய்கள், இந்தியாவிலுள்ள குயத்தொழிற் சாலைகளில் முதல் முதலாக போர்ஸலேன் பிடிகளும், இன்சுலேடர்களும், காந்த அமைப்புப் பிடிகளும் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேவிதமாக இந்தியாவில் பேகலிட் விளக்குப் பிடிகளும் மேன்கூரை அமைப்புகளும் செய்யப்படுகின்றன.

ஏராளமான ஸப்ளைகள்.

ஆபிரிக்கா யுத்தத்துக்கு ஏராளமான பாட்டரிகளும், சிறிய விளக்குகளுக்கும், ஸெல்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகாயத்திலிருக்கும் விமானத்துக்கும், தரைக்கும் தகவல் அனுப்புவதற்கு விமானத்தில் நன்றாய் வேலை செய்யக்கூடிய மின்சார பாட்டரிகள் வைக்கப்பட்டிருக்கவேண்டும். பிரிடனிலிருந்து நன்னம்பிக்கைமுனையைச் சுற்றி மத்தியக் கிழக்குக்குக் கொண்டுபோகப்படும் பாட்டரிகள் பழுதுபட்டுக் கெட்டுப்போய்விடுகின்றன. ஆகையால், பிரிடிஷ் விமானங்களுக்குத் தேவையான பாட்டரிகளைத் தயாரிக்கும் வேலையானது 1941-ம் வருஷம் பிற்பாதியில் இந்தியாவில் துவக்கப்பட்டது. இதற்குப் பின்

இந்தியாவிலிருந்து 5 மிலியன் பாட்டரிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மற்ற படைகளின் உபயோகத்திற்கு இந்தியா அனுப்பியிருக்கும் பாட்டரிகளையும் சேர்த்துக்கொண்டால் கணக்கு அபரிமிதமாகயிருக்கும்.

எல் அலமீனில் வெற்றிபெற்றதற்குக் காரணம் மறைபொருளாக இருந்து யுத்தம் செய்ததுதான். இந்தியாவிலிருந்து ஏராளமான வர்ணங்களும், வலைகளும், சணலும் சென்றிருக்கின்றன. ஒரே நீளமாக அமைத்தால் இந்த வலைகள் உலகம் பூராவையும் எட்டுத் தடவை சுற்றிவிடும். இந்த வலைகளை இந்தியாவிலுள்ள மின்சாரசக்தியுள்ள தொழிற்சாலைகள்தான் உற்பத்தி செய்கின்றன என்பது கிடையாது. இந்திய கிராம வாசிகளும், இன்னும் அநேகரும் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வலைகள் தாக்குதலுக்கு முன்பு துருப்பு சேமிப்பு ஸ்தலங்களையும், பீரங்கிகளையும் மறைத்துவைப்பதற்கு உபயோகப்படுகின்றன. எரிட்ரியா யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டதும் வரப்போகும் யுத்தங்களில் உபயோகிக்கக்கூடியதுமான மலைப்பிராந்தியங்களில் பிரயோஜனப்படும் பீரங்கிகளை இந்தியர்கள் கையாண்டுவருகிறார்கள். இந்தப் பீரங்கிகளைத் தயாரிப்பதிலும், அதைப் பரிபாலிப்பதிலும் இந்தியா பொறுப்பேற்றுக்கொண்டுவிட்டது.

அதிக உஷ்ணமான பிரதேசங்களில் துருப்புகளை ரக்ஷித்த கூடாரங்களில் 90 சதவிகிதமும், டாங்கிகள், விமானங்கள், மோட்டார் வண்டிகள் இவைகளில் மணல் அடிக்காதபடி மூடும் துணிகளும் இந்தியாவிலிருந்து ஸப்ளை செய்யப்பட்டன. மத்தியக்கிழக்கில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கூடாரங்கள் விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்டன. துருப்புகள் இந்தியாவில் நெசவு செய்யப்பட்ட ஆடைகளை அணிந்துவந்தார்கள். இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து அனுப்பப்பட்ட ஜோடுகளையும் அவர்கள் போட்டுக்கொண்டார்கள். இதைத் தவிர உணவுப் பொருள்களையும் இந்தியா அனுப்பியிருக்கிறது. தண்ணீரைச் சுத்தி செய்வதற்குத் தேவையான ரசாயனப் பொருள்கள் 40,000 டன் எடைமானமுள்ளவை. இந்தியாவில் முதல் முதலாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன.

வைத்திய வசதிகள்.

துருப்புகளுக்கு வேண்டிய மருந்து சாமான்கள், தளவாடங்கள், சௌகரியங்கள் சம்பந்தமாக இந்தியா 50,000 டோலிகளையும், 1 மிலியன் ஜமக்காளங்களையும் 2,50,000 கொசு வலைகளையும், 15,00,000 மாத்திரைகளையும், கொசுவை அழிப்பதற்கு 160 டன்கள் எடைமானமுள்ள மருந்தையும், 3,36,000 அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயும் அனுப்பியிருக்கிறது. இன்னும் 1,500 தினுசான வைத்திய சாமான்களும் இந்தியாவிலிருந்து சென்றிருக்கின்றன. போர்க்களத்திலுள்ள துருப்புகளுக்கு முதலுதவிக்கு லாயக்கான $2\frac{1}{2}$ இஞ்சு அகலமுள்ள 1,25,000 காயம் கட்டும் துணிகளும் அனுப்பப்பட்டன. இவைகள் 2,000 மைல்கள் நீளமிருக்கும்.

ருஷ்யாவுக்கும் மறைமுகமாக உதவி.

இந்தியா செய்திருக்கும் பேருதவியில் கப்பல்களின் மீதத்துக்கு இந்தியா உதவி செய்ததும் ஒன்றாகும். பிரிடனிலிருந்து சாமான்களைக் கொண்டுபோவதென்றால் ஏராளமான கப்பல்கள் வேண்டும். மற்ற போர்முனைகளிலிருந்து ருஷ்யாவுக்குக் கப்பல்கள் சென்றிருக்கமுடியாது. சுருக்கமான மார்க்கத்தின் மூலம் இந்தியா 15,00,000 டன்கள் எடைமானமுள்ள சாமான்களை அனுப்பியிருக்கிறது. அதாவது, அவ்வளவு சாமான்களை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்களை இந்தியா அனுப்பியிருக்கிறதென்று பொருள்படும். சாமான்களை பத்திரமாக சமுத்திர மார்க்கத்தில் கொண்டுபோய் ஸப்ளை செய்வதற்கு இந்தியத் துணைக் காவல் கப்பல்களின் உதவி அசியம். பாரஸீக வளைகுடாவிலும், வட ஆபிரிக்கா துறைமுகங்களிலும் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தளவாடங்கள், வேலைக்காரர்கள், யந்திர வேலைக்காரர்கள் உதவியால் இராக்குக்கும், எகிப்துக்கும் சாமான் அனுப்பும் துறைமுகங்களில் காப்பாற்றப்பட்டுவந்தன. வட ஆபிரிக்கா யுத்தத்தின் கடைசி காலத்தில் இந்தத் துறைமுகங்களில் கிழக்குப் பிரதேசத்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் சாமான்கள் ஏராளமாக வந்து இறங்கின.

வட ஆபிரிக்கா யுத்தம் நடைபெற்றபொழுது பிரிடனிடமிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்த சாமான் கப்பல்கள் நடு மார்க்கத்தில் மூழ்கிவிட்டபொழுது, இந்தியாவிலிருந்து சாமான்கள் அனுப்பப்பட்டன. ஒரு சமயத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 7,000 டன் எடைமானமுள்ள எஃகுத் தகடுகள், டாங்கி எதிர்ப்பு சுரங்க வெடிகளைத் தயாரிப்பதற்காக மத்தியக்கிழக்குக்கு அனுப்பப்பட்டன. இம்மாதிரியான தகடுகள் இங்கிலாந்திலிருந்து வருவதற்குத் தாமதம் ஏற்பட்டது. சென்ற வருஷம் நடைபெற்ற தற்காப்பு யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட சுரங்க வெடிகளைத் தயாரிப்பதற்கு இந்திய எஃகுத் தகடுகள் உபயோகிக்கப்பட்டன.

பொருள் உதவி.

(விசாகப்பட்டணத்தில் மிஸ்ட்டர் C. H. மாஸ்ட்டர் மான், C. I. E., I. C. S. நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து சில குறிப்புகள்.)

டிபென்ஸ் கடன் பத்திரங்களை நாம் வாங்குவதற்கு மூன்று காரணங்களிருக்கின்றன. முதலாவது, யுத்தத்தை நடத்துவதற்கு உங்களுடைய பொருள் உபயோகிக்கப்படும். இரண்டாவதாக, உங்களுடைய பொருளை சரியான இடத்தில் போட்டு வைப்பதாகும். மூன்ருவதாக டிபென்ஸ் பத்திரங்களை வாங்குவதில் நீங்கள் பொருளைச் செலவிட்டால், நாணயப்பெருக்கையும், விலைவாசி உயர்வையும் தடுக்க நீங்கள் ஒத்தாசை செய்ததாகும். முதல் இரண்டு காரணங்களையும் விளக்கிச் சொல்லவேண்டியதில்லை. மூன்ருவதைப்பற்றி விவரணம் செய்யவேண்டும். தெளிவாகச் சொன்னால், இந்தியாவில் இப்பொழுது சில சாமான்களின்மையும், ஏராளமான பொருளின் சிலாவணியுமிருந்துவருகிறது. இந்த இரண்டும் சேர்ந்து தான் விலைவாசிகளின் உயர்வை உண்டுபண்ணிவிடுகிறது. சாமான்கள் இல்லையென்பதற்கு ருஜு தேவையில்லை. சாமான் கிடைப்பது கஷ்டமாகயிருப்பது உங்களுக்குத் தெரியும். இந்தக் கஷ்டம் யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்துக்கு முன், எண்ணெய், ரப்பர், அரிசி முதலிய வஸ்துக்களை நமது நாட்டிற்கு ஏற்றுமதி செய்த பர்மா, டச்சுக்கிழக்குத் தீவுகள போன்ற நாடுகள் ஜப்பானின் வசமாகிவிட்டதும் அவசியமான யுத்த தளவாடங்கள் கொண்டுவருவதை வின மற்ற சாமான்களை அனுப்ப கப்பல் வசதிகளின் குறைவும் நம்முடைய கஷ்டங்களுக்குக் காரணங்களாகும். இதைப்பற்றி நாம் ஒன்றும் செய்யமுடியாது. யுத்தம் உலகமளாவி நடை பெறுவதிலிருந்து இந்தச் சிரமம் ஏற்பட்டுவிட்டது.

போக்குவரவு கஷ்டங்கள்.

மாகாணத்தில் சில பாகங்களில் சாமான் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு வேறு காரணங்களுண்டு. உள்நாட்டில் போக்குவரவு சாதனக் குறைவுதான் இதற்கு முகாந்திரம். மாகாணங்களின் எல்லா பாகத்துக்கும் பொருள்களைப் பங்கிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. யுத்த காலத்தில் இருப்புப்பாதை வசதிகளும் மோட்டார் போக்குவரத்தும் குறைவுபட்டுவிட்டன என்று நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். மாகாணப் போக்குவரவு சங்கத்தில் நான் ஒரு மெம்பர். போக்குவரவு சிரமங்களை நானறிவேன். கஷ்டத்தை நிவர்த்தி செய்யப் போதுமான நடவடிக்கை எடுத்து வருகிறோமென்று நான் சொல்லக்கூடும்.

ஏராளமான பொருள் சிலாவணியிலிருந்து வருகிறதென்பதற்கு ருஜு வேண்டும். இதற்கு சிறிய சில உதாரணங்களைக் கூறுகிறேன். நில வரி வசூல் இப்பொழுது அதிகரித்திருக்கிறது. சுபிக்ஷமாகயிருக்கும் பொழுதே வருமான வரியை முன் கூட்டியே செலுத்திவிடவேண்டுமென்று சிலர் நினைக்கிருர்கள். அவர்களிடம் ஏராளமான பொருளுமிருக்கிறது. நாட்டுச் சாராயம், கள் குடிப்பது அதிகரித்துவிட்டது. இதிலிருந்து நாட்டிலுள்ள எல்லா மக்களிடமும் ஏராளமான பணமிருக்கிறதென்று ஊகிக்கலாம்.

ஆகையால் அபரிதமாகயிருக்கும் பணத்தை அனுவசியமான சாமான்களை வாங்குவதிலும் அல்லது தேவைக்கு உபரியாக அவசியமான சாமான்களை வாங்கிச் சேமிப்பதிலும் பணத்தை செலவிடாது மீதம் பிடித்து, சிலாவணி நாணயங்களைக் குறைவுபடுத்தி வேறு மார்க்கங்களில் உபயோகப்படும்படி செய்வது அவசியமாகும். யுத்த காலத்தில் பொழுது போக்குகளிலும், கல்யாணங்களிலும், உற்சவங்களிலும், இன்னும் அநேக முறைகளிலும் அளவுக்குமேல் உபரியாக ஜனங்கள் பணத்தை விரயம் செய்து வருகிருர்கள். ஜீவனத்துக்கு அவசியமான சாமான்களை மட்டும் வாங்கி பாக்கிப்படும் தொகையை டிபென்ஸ் கடன் பத்திரங்களில் போடுவீரர்களானல், யுத்தத்தை நடத்துவதற்கு அரசாங்கத்தாருக்கு உதவி செய்வதுடன் சிலாவணியில் உபரியாகயுள்ள பணத்தை அனுவசியச் செலவு செய்யாதவர்களாகவும் விலைவாசியின் உயர்வைத் தடுப்பதில் முயற்சி செய்தவர்களாகவும் ஆகிவிடுவீர்கள்.

விலைவாசியின் உயர்வு.

இப்பொழுது விலைவாசிகளின் உயர்வைப்பற்றித்தான் நாடெங்கும் கவலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஏராளமான அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. ஜனங்கள் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து நிற்கிருர்கள். அவர்களுக்கு ஒரு விடையளிக்கிறேன். "இப்பொழுது ஒரு உலக யுத்தம் நடைபெறுகிறது. யுத்த மத்தியில் எல்லாம் ஒழுங்காக நடைபெறுமென்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது." சில குறைவுகள் உண்டாகத்தான் நேரிடும். உற்பத்தியாகும் ஸ்தாபனங்களிலிருந்து விற்பனை ஸ்தலங்களுக்கு சாமான்களைக் கொண்டுபோவதற்கு போக்குவரவு சிரமங்கள் ஏற்படக்கூடும். சாமான்களும் அதிக விலைக்குத்தான் விற்பனை செய்யப்படும். நான் ஏற்கனவே சொன்னபிரகாரம் சாமான்களின்

அதிக விலைக்கு இரண்டு காரணங்கள் உள. விற்பனை சாமான்களின் குறைவு. சாமான் வாங்குகிறவர்களிடம் ஏராளமான பொருள். இவ்விரண்டும் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள். சாமான்களின் குறைவுக்கு சாமான்கள் உற்பத்தி செய்த நாடுகள் எதிரி வசமாகி விட்டதும், சாமான்கள் கொண்டுவருவதற்கு கப்பல் வசதிக்குறைவும் காரணமாகும். நாணயங்களின் அபரிமிதத்துக்கு யுத்த தளவாடங்களுக்கு அரசாங்கத்தார் கொடுக்க வேண்டியதும் ராணுவ யந்திர சாலைகளில் வேலை செய்து வருகிறவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டியது காரணமாகும்.

பங்கிடு செய்து கொண்டு பணத்தை மீதம் பிடியுங்கள்.

இந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க நாம் என்ன செய்யவேண்டும் நாம் சிக்கனமான முறையில் வாழலாம். சேமித்து வைக்காமல் மீதப்படும் தொகையை டிபென்ஸ் கடன் பத்திரங்களில் போட்டு வைக்கலாம். அதாவது நமது தேவைகளைக் குறைத்துக்கொண்டு மீதப்படும் பணத்தை யுத்த சேவைக்குக் கடன் கொடுத்து உதவுவதென்பது தான்.

பஸிபிக் யுத்தத்தில் ஜப்பானின் வலுக்குறைவுபடுகிறது.

ஜப்பானியக் கப்பல் நஷ்டங்கள்.

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் யுத்த ஆரம்பம்முதல் ஜூன்மீ 11-ம் தேதி முடிய ஜப்பானுக்கு பஸிபிக் சமுத்திர யுத்தத்தில் ஏற்பட்ட கப்பல் நஷ்ட விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்குகள் அமெரிக்கக் கடற்படை இலாகாவின் பிரசுரங்களிலிருந்தும், ஜெனரல் மாக் ஆர்தரின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட ரிபோர்ட்டுகளிலிருந்தும் தயாரிக்கப்பட்டன. இரண்டு ரிபோர்ட்டுகளும் வெளிவந்தகாலத்தில் சில அம்சங்களை இரட்டித்துச் சொல்லியிருந்ததால் மொத்த நஷ்டங்கள் சரியாகக் கணக்கிட்டுச் சொல்லமுடியவில்லை.

அமெரிக்காவின் கடற்படை இலாகா பிரசுரங்கள்.

சண்டைபோடும் கப்பல்கள்.	மூழ்கியவை.	மூழ்கியிருக்கக் கூடியவை.	பழுதுபட்டவை.
யுத்தக் கப்பல்கள் ...	2	...	9
விமானம் தாங்கிகள் ...	6	1	7
சஞ்சாரிகள்	24	4	44
நாசகாரிகள் ...	60	19	60
நீர்மூழ்கிகள் ...	6	1	6
ஸப்ளை கப்பல்கள் ...	1	1	4
பலவகைப்பட்ட கப்பல்கள் ...	21	2	17
	120	28	147
சண்டைபோட முடியாத கப்பல்கள்	195	23	96

ஜெனரல் மாக் ஆர்தரின் காரியாலயத்திலிருந்து வந்த பிரசுரங்கள்.

சண்டைபோடும் கப்பல்கள்.	மூழ்கியவை.	மூழ்கியிருக்கக் கூடியவை.	பழுதுபட்டவை.
யுத்தக் கப்பல்கள் ...	...	...	1
விமானம் தாங்கிகள் ...	1	...	2
சஞ்சாரிகள்	10	...	20
நாசகாரிகள்	14	...	20
நீர்மூழ்கிகள்	10	...	2
ஸப்ளைக் கப்பல்கள் ...	1	...	...
பீரங்கிப் படகுகள் ...	4	...	...
மீன் வெடிப்படகுகள் ...	1	1	1
பலவகைப்பட்ட கப்பல்கள் ...	...	1	1
	41	2	47
சண்டைபோட முடியாத கப்பல்கள்	99	9	171

ஜெனரல் மாக் ஆர்தரின் காரியாலயத்திலிருந்து கொடுக்கப்பட்ட நஷ்டக் கணக்குடன் மூழ்கியதும், பழுதுபட்டதுமான பலவகைப்பட்ட சிறிய கப்பல்கள், அதாவது, படகுகள், மீன்பிடிக்கும் படகுகள் எல்லாம் சேர்ந்து 243 கப்பல்கள் ஜப்பானுக்கு நஷ்டமாகியிருக்கின்றன.

"ஊர்ந்துவரும் மிருத்யு."

பிரிடிஷ் விமானப்படையிலுள்ள மஸ்டங் விமானத்திற்கு ஜெர்மனியின் நாமதேயம்.

ஐரோப்பாவில் நாஸிகளின் போக்குவரத்து சாதனங்களையும், ரஸ்தாக்களையும் கீழாகப் பறந்து தாக்குவதற்கு பிரிடிஷ் விமானப்படை உபயோகப்படுத்திவரும், மஸ்டங் என்னும் விமானமானது அமெரிக்காவில் கட்டப்பட்டது. இதை ஜெர்மானியர்கள் டெர்க்ரீ செண்டிடாங் அதாவது "ஊர்ந்துவரும் மிருத்யு" என்று அழைக்கிறார்கள். இந்த விமானத்திலுள்ள ஒவ்வொரு சாதனமும் கீழாகவும் அதிவேகமாகவும் பறப்பதற்கு உபயோகமுள்ளதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் கீழாகப் பறந்து செல்லுவதைப் பார்த்தால் இது தரையில் ஊர்ந்து செல்லுகிறதோ என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஊர்ந்து செல்லும் பொழுதும் இந்த விமானம் மணிக்கு 400 மைல்கள் வேகமுள்ளது. இந்த விமானம் இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டும்பொழுது அலைகள் மட்டத்தில் செல்லுகிறது. சில சமயம் புரோபல்லர்கள் அலைகளைத் தொட்டுக்கொண்டும் செல்லுகின்றன.

ரேடியோ மூலம் விமானம் கண்டுபிடிப்பதைத் தவிர்க்கத்தான் இம்மாதிரி மஸ்டங் தாழப்பறக்கிறது. எதிரிகள் அபாய அறிவிப்புச் செய்யுமுன் இந்த விமானம் தன்னுடைய வேலையைச் செய்துவிட்டு சொந்த நாட்டிற்குத் திரும்பிவிடும். இந்த விமானத்தின் உயர்வான நடவடிக்கைகளுக்கு விமானத்தின் இறக்கைகளின் தடிப்பான அமைப்புதான் காரணம். இது புதுமாதிரியாக அமைக்கப்பட்டிருப்பதால், கடல் மட்டத்தில் செல்லும் பொழுது அதிகக் காற்றினின்றும் விமானத்துக்கு அபாய மேற்படாமல் இறக்கைகள் தடுத்துவிடுகின்றன.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 152. (5-வது பிரிவு.)

26- 6-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை 6.00
27- 6-43	ஆலங்குடி	... ,, 7.00
,,	ராசியமங்கலம்	... ,, 7.30
28- 6-43	திருமயம்	... ,, 7.00
,,	மேலூர்	... ,, 7.30
29- 6-43	பள்ளிவாசல்	... ,, 7.00
,,	பில்லமங்கலம்	... ,, 7.30
30- 6-43	பொ. புதுப்பட்டி	... மாலை 7.00
,,	வேந்தம்பட்டி	... ,, 7.30
1- 7-43	வெள்ளனூர்	... ,, 7.00
,,	செம்பாட்டூர்	... ,, 7.30
2- 7-43	புலியூர்	... ,, 7.00
,,	கண்ணங்குடி	... ,, 7.30

பிரஸங்கம் 153. (6-வது பிரிவு).

3- 7-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை 6.00
4- 7-43	கீழாநிலை	... ,, 7.00
,,	கீழாநிலை-புதுப்பட்டி	... ,, 7.30
5- 7-43	பெருமாநாடு	7.00
,,	புல்வயல்	... 7.30
6- 7-43	சடயம்பட்டி	... ,, 7.00
,,	ஒலியமங்கலம்	... ,, 7.30
7- 7-43	அன்னவாசல்	... மாலை 7.00
,,	கீழக்குறிச்சி	... ,, 7.30
8- 7-43	மலம்பட்டி	... ,, 7.00
,,	பேராம்பூர்	... ,, 7.30
9- 7-43	ஆலவயல்	... ,, 7.00
,,	அம்மன்குறிச்சி	... ,, 7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

26—6—43	திருமயம்.
27—6—43	ஏம்பல்.
28—6—43	முள்ளங்குறிச்சி.
29—6—43	கோனாபட்டு.
30—6—43	கீழாநிலை-புதுப்பட்டி.
1—7—43	ஆலங்குடி.
2—7—43	புதுக்கோட்டை.
3—7—43	வெட்டன்விடுதி.
4—7—43	கொடும்பாளூர்.
5—7—43	விராலிமலை.
6—7—43	ராமச்சந்திரபுரம்.
7—7—43	கரம்பக்குடி.
8—7—43	குழிபிறை.
9—7—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—29-6-43.

ஐக்கியதேசக் கொடி விழா வாழ்த்து.

(Mr. T. O. நடராஜ பிள்ளையவர்கள் இயற்றியது.)

நிலமண்டில ஆசிரியப்பா.

நீர்வளர் கடல்சூழ் நிலமிசை என்றும்
சீர்வளர்ந் தோங்கச் செங்கோ லோச்சிய
முடியுடை வேந்தர் முயன்று வளர்த்த
கடிமலர் பொழில்களாம் கற்றோர் போற்று
அறங்கள் யாவும் அழிந்திடச் செய்து
மறங்குல விடச்செய் மாண்பிலா ஹிட்லர்,
அவனியி லுள்ளோர் அனைவரும் தங்கட்கு
உவகையோ டுழைக்க உற்பவித் தவரே
சாதி மதத்தால் தாழ்ந்தவ ரேயென
ஓதி இன்னல் உஞற்றிடும் ஹிட்லர்,
அன்பருள் அடக்கம் அற்ற ஹிட்லர்,
துன்பம் விளைக்கும் துற்குண ஹிட்லர்,
உத்தம குணங்கள் ஒன்றும் இல்லா
இத்தா லியரையும், எதீதிச் செயலையும்
தப்பா தியற்றும் தறுகண் ணளராம்
ஜப்பானி யரையும் சார்ந்த ஹிட்லர்,
மண்ணா சையினல் மக்கள் துயரை
எண்ணா திருக்கும் இழிதகை ஹிட்லர்,
வலிதிற் சென்று வஞ்சித் தன்பரும்
நலியச் செய்து நாடு பிடிக்கும்
தீய ஹிட்லர், திறனழிந் தொழிய,
நேயக் கட்சியாம் நேர்மை பேரருள்,
கடவுட் பற்று கண்ணியம் வாய்ந்த
அடல்மிகு படைசேர் ஆங்கி லேயர்,
உயிரினும் மானம் உயர்ந்த தெனவாழ்
செயிர்தீர் ருஷ்யர், செல்வமும் திறனும்
அமையப் பெற்றுளிர் அமெரிக் கர்கள்,
கமைவுறு சீனர், கல்வி யறிவு
மாண்பு துய மனம்வள் ளன்மை
ஆண்மை நன்றி அமைந்தநம் இந்தியர்
முதலாம் முப்பான் மூன்றுதே சத்தார்
இதமுறச் சேர்ந்து இவ்வுல குள்ளோர்
யாவரும் வாழ, அறனெலாம் தழைக்க,
பாவலர் போற்று பண்பெலாம் மல்க,
தன்னலம் இன்றித் தாழா துழைக்க
நன்மனம் திறமை நல்கென இறைவன்
மலரடி போற்றி மகிழ்ந்து கொடிகளை
நலமுற வாழ்த்துதும் நனிவாழ்த் துதுமே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகமெலாம் செழித்தோங்க உயர்வுதரு பேச்சுரிமை ஒழுக்கம் வாய்மை
ஒன்றுமத உரிமையொடு ஒருசிறிதும் வறுமைபயம் ஒன்றா வாழ்வு
இலகஅர சியற்றுங்கி லேயரமெ ரிக்கருஷ்யர் எழிலார் மக்கள்
எல்லோரும் அடிமைகளே எல்லார்க்கும் மதத்தால் தாம் இணையே யற்ற
வலனுடையார் ஏனுங்கொள்கை வாய்ந்தகொடும் ஜர்மனியர் வலுவிற் சென்று
வழுத்தியசொல் யுத்தநெறி வழக்கமறந் தியற்றிடும்போர் வலியைக் கொன்று
நலனெடுவை யகம்வாழ நல்லறங்கள் மல்கவகை நாடிச் செய்து
நறுமலர்தூஉய் கொடிபோற்றி நாதனருள் வெற்றியொடு நாம்வாழ் வோமே.

வட ஆபிரிக்காவில் நேசக்கட்சி அடைந்த வெற்றிக் கொண்டாட்டப் பாட்டு.

By
(A. RAMASWAMI AYYAR, *N. W. F. Member, Panayapatti.*)

1. வெற்றி பெற்றோம் வீர வெற்றி பெற்றோம்
வெற்றியே பெற்றோம் வடக்காப் பிரிக்காவில்
சற்றும் சலியாது சமர் தனிலே—கொடுஞ்சமர் தனிலே
வெற்றிக் கொடியே நிலைநாட்டி விட்டோம்.

2. வீர ரென்று பேசிவந்த நாசிகளை
தூரத் தொரத்தி யடித்து விட்டோம்
நீண்டகாலம் நடந்த போரினிலே—கொடும் போர் தனிலே
பூண்டோமே புகழ்பெற வெற்றிமாலை.

3. பாரிதனைப் பங்குபோட பார்த்த துரோகிகள்
போர்மூண்ட பின்னையதில் சேரவு மானார்
சீர்கெட்ட ஜெர்மனியின் தோல்வியைக்கண்டு—கடுந் தோல்வியைக்கண்டு
சோர்வுண்டு சிந்தையே கலங்கிடலானார்.

4. ஹிட்லரின் இருதயம் இடிந்துமே போச்சே
சட்டெனவே தம்நாடும் தொலையுமே யென்று
முசலோனி தன்மனம் மயங்கிடலாச்சே—முற்றும் தியங்கிடலாச்சே.
கொசுப்போல அவர்தேசம் நசிங்கிடு மென்று.

5. நடுங்குதே மஞ்ச ளரக்கரின் நெஞ்சு
படுவோமே இனியிடி மிக்கவே யென்று
இதுவேநம் ஆரம்ப வெற்றிதானச்சே—வீர வெற்றிதானச்சே
இறுதிவெற்றி நமதென்ற உறுதியு மாச்சே.

6. ஆகவேநாம் போருதவி யெல்லாம் செய்ய
வேகமாக யிக்கணமே வந்திடு வோமேல்
ஆவலான சுதந்திர மடைந்தபின்னர்—விரைவில் அடைந்தபின்னர்
தீவிரமாய் பலநன்மை பெற்றிடு வோமே.

State Press, Pudukkottai. 2,000—28-6-43.